


# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2016 OCTOBER

மலர்: 10 இதழ் : 1 அக்டோபர் 2016 விலை : ரூ. 5

கடலில் உணவுச் சங்கிலி





## உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமா?




## உணவுச்சங்கிலிகளை உடைத்தால் என்னாகும்?

## படைத்தவனுக்கே பரிந்துரையா?



தரையில் உணவுச்சங்கிலி



# சகஜீவிகளை மதித்து வாழ்!



நம்மோடு இந்த பூமியில் வாழ்ந்து வரும் சக ஜீவராசிகளை விட நாம் படைப்பு ரீதியாக உயர்ந்தவர்களே ஆனாலும் அவற்றை நாம் விரும்பியவாறு கையாளவோ உரிமைகளைப் பறிக்கவோ மனிதர்களுக்கு அனுமதி இல்லை. என்று கற்றுத் தருகிறது இஸ்லாம்.

● இப்னு மஸ்வூத் என்ற நபித் தோழர் தெரிவிக்கிறார்:

ஒருமுறை நபி முஹம்மது (ஸல்) அவர்களுடன் நாங்கள் பயணத்தில் சென்று கொண்டிருந்தோம்.அப்போது குருவி வகை தாய் பறவை ஒன்று தனது குஞ்சுகளுடன் இருப்பதைக் கண்டோம். நாங்கள் குஞ்சுகளை எடுத்துக்கொண்டோம். தாய் பறவை இதனைப் பார்த்து அலறியது. அப்போது நபிகளார் அங்கே வந்து ‘குஞ்சுகளைப் பறித்துக் கொண்டு இந்தப் பறவைக்கு துன்பத்தை விளைவித்தது யார்? குஞ்சுகளைத் தாயிடம் ஒப்படையுங்கள்’ என்று கட்டளையிட்டார்.

பிறகு நாங்கள் எரித்த எறும்பு புற்று ஒன்றையும் அந்தப் பயணத்தின்போது நபி பார்த்தார்கள். “இதனை எரித்தது யார்?’ என்று கேட்டார்கள். “நாங்கள்தான்’ என்று பதிலளித்தோம். அப்போது நபி அவர்கள் “நெருப்பின் அதிபதியை தவிர வேறு யாரும் வேறு எவரையும் இதுபோல் தண்டிக்கக் கூடாது’ என்று அறிவுறுத்தினார்கள். (அபூதாவூத்)

## பேரரசரும் எறும்பின் உணர்வுகளை மதித்தல்



முன்னாள் இறைத்தூதர்களில் ஒருவரான சுலைமான் (சாலமன்) (அவர் மீது சாந்தி உண்டாவதாக) அவர்களுக்கு ஒரு சிறப்பு அருட்கொடையாக மாபெரும் அரசாட்சியும் பறவைகள், எறும்புகள் போன்ற ஐந்தறிவு ஜீவிகளின் மொழிகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் வழங்கியிருந்தான். ஒருமுறை சுலைமான்(அலை) அவர்கள் தன் பட்டாளத்துடன் போகும் போது நடந்த சம்பவம் பின்வருமாறு திருக்குர்ஆன் கூறுகிறது:

**27:18.** இறுதியாக, எறும்புகள் நிறைந்த இடத்திற்கு அவர்கள் வந்த போது ஓர் எறும்பு (மற்ற எறும்புகளை நோக்கி) ''எறும்புகளே! நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள் ஸுலைமானும் அவருடைய சேனைகளும், அவர்கள் அறியாதிருக்கும் நிலையில் உங்களை நசுக்கி விடாதிருக்கும் பொருட்டு (அவ்வாறு செய்யுங்கள்)'' என்று கூறிற்று.

**27:19.** அப்போது அதன் சொல்லைக் கேட்டு, அவர் புன்னகை கொண்டு சிரித்தார். இன்னும், ''என் இறைவா! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்துள்ள உன் அருட்கொடைகளுக்காக, நான் நன்றி செலுத்தவும், நீ பொருந்திக் கொள்ளும் விதத்தில் நான் நன்மைகள் செய்யவும், எனக்கு அருள் செய்வாயாக! இன்னும் உம் கிருபையைக் கொண்டு என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக!'' என்று பிரார்த்தித்தார்.

ஒரு சிறு எறும்பின் உணர்வுகளுக்கும் மனிதன் மதிப்பும் மரியாதையும் கொடுத்தாக வேண்டும் என்பது இந்நிகழ்வு மூலம் நாம் பெறும் பாடமாகும். அனைத்து செயல்களுக்கும் இறுதித்தீர்ப்பு நாளன்று இறைவனின் முன் வரும் என்பதை திருகுர்ஆன் நமக்கு எச்சரிக்கிறது:

**99:7,8** எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவர் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவர் கண்டு கொள்வார்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2016 OCTOBER**

மலர்: 10 இதழ் : 1 அக்டோபர் 2016 விலை : ரூ. 5

## பொருளடக்கம்

*பக்ரீத் பண்டிகையும் உயிர் பலியும் -2*

*பாவபுண்ணியங்களை தீர்மானிப்பது யார்? -5*

*இறைவனின் பார்வையில் இது பாவமல்ல! -7*

*உணவுச் சங்கிலி -9*

*கால்நடைகளைக் கொல்வதும் ஜீவகாருண்யமே! -11*

*பலிப்பிராணியிடம் ஜீவகாருண்யம் -12*

*மனிதனுக்கும் விலங்கினத்துக்கும் அநீதி!- 13*

*மனித உடலமைப்பும் அசைவமும் -14*

*படைத்தவனுக்கே பரிந்துரையா? -15*

*படைத்தவன் பரிந்துரைக்கும் அறுப்பு முறை -17*

*அசைவம் தவறு என்போருக்கான சில கேள்விகள் -19*

*அழியாத தியாக வரலாற்றுச் சுவடுகள் -20*

*கர்நாடகாவும் தமிழ்நாடும் இணைய முடியுமா?- 22*

*அடிமைகளை விடுவித்த அபூபக்கர் (ரலி) -24*

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,

AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# பக்ரீத் பண்டிகையும் உயிர் பலியும்

சமீப காலமாக இஸ்லாத்தை ஒரு வன்முறை மார்க்கமாக சித்தரிக்க ஊடகங்கள் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிவீர்கள். வருடந்தோறும் முஸ்லிம்கள் கொண்டாடும் பக்ரீத் பண்டிகையின்போது நிறைவேற்றப்படும் ஆடு மாடுகள் பலியை ஒரு கொடூரமான செயலாக சித்தரித்து இஸ்லாமிய மார்க்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முயல்கின்றன ஊடகங்கள்.

உண்மையில் பெரும் செல்வந்தர்களை உணவூட்டுவதற்காக கொழுத்த பன்னாட்டு நிறுவனங்கள் எண்ணற்ற உயிர்களை அன்றாடம் கொல்கின்றன. ஆனால் வருடம் ஒருமுறை ஏழைகளோடு பங்கிட்டு உண்பதற்காக பக்ரீத் அன்று அறுக்கப்படும் கால்நடைகள் கொடூரம் வாய்ந்த செயலாக சித்தரிக்கபடுவதை அறிவீர்கள்.

சரி, வாருங்கள் இந்த பக்ரீத் கொண்டாடப்படும் பின்னணியை அறிய முற்படுவோம்...

### இப்ராஹீம் நபிக்கு இறைவன் வைத்த சோதனை

இவ்வுலக வாழ்க்கை என்பது இறைவனால் நடத்தப்படும் பரீட்சை என்பதை அனைவரும் அறிவோம். இப்பரீட்சையில் பலரும் பல்வேறு விதமாக சோதிக்கப்படுகிறார்கள். சுமார் 5000 வருடங்களுக்கு முன்னாள் வாழ்ந்த இப்ராஹீம் என்ற ஒரு இறைத்தூதருக்கு வாய்த்த பரீட்சை மிகவும் அலாதியானது. அவர் முழுக்க முழுக்க இறைவனுக்குக் கட்டுப் பட்டவராகவும் இறைக்கட்டளைகள் எதுவானாலும் சிறிதும் தயக்கம் காட்டாமல் நிறைவேற்றுபவராகவும் இருந்தார். இறைவன் மீது அவர் கொண்டிருந்த அளப்பரிய நம்பிக்கையும் ஈடிணையில்லாதது. சிலைவணங்கிகளாயிருந்த தன் நாட்டு மக்களுக்கிடையே தனிநபராக நின்று சத்தியப்பிரச்சாரம் செய்து அதன் விளைவாக அந்நாட்டு அரசனால் நெருப்புக் குண்டத்தில் எறியப்பட்டார். இறைவன் கட்டளையிட்டான் என்பதற்காக தனது ஆருயிர் மனைவியையும் பச்சிளம் பாலகனையும் ஒரு பாலைவனத்தின் நடுவெளியில் விட்டுவிட்டு வந்தார். இவ்வாறு தொடர்ந்து அவருக்குக் கொடுக்கப்பட்ட அனைத்துப் பரீட்சைகளையும் ஒரு சிறிதும் தயக்கம் காட்டாமல் நிறைவேற்றி வந்தார். இறைவன் அனைத்து சோதனைகளிலும் அவரையும் அவரது குடும்பத்தாரையும் காப்பாற்றவும் செய்தான். அவருக்கு உச்சகட்டமாக வைக்கப் பட்ட ஒரு பரீட்சையை மனிதகுலம் நினைவுகூரவும் அதன் படிப்பினையை வாழ்வில் கடைப் பிடிக்கவுமே முஸ்லிம்களால் பக்ரீத் அல்லது தியாகத் திருநாள் என்ற பண்டிகை கொண்டாடப்படுகிறது.

### அது என்ன சோதனை?

இந்தப் பரீட்சை வாழ்வில் நமக்கு ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள உடல், பொருள் ஆவி என எதுவுமே நமதல்ல. இதன் உண்மை உரிமையாளன் இறைவன்தான் என்பதை நாம் அறிவோம். ஆனாலும் நமக்கு இரவலாக இறைவன் தந்துள்ள இவற்றில் எதையாவது திருப்பிக் கேட்டால் அதை திருப்பிக் கொடுக்க நம்மில் யாருக்குத்தான் எளிதாக மனது வரும்? உதாரணமாக நம்மிடம் யாசிக்க யாராவது ஏழைகள் வந்துவிட்டால் அல்லது நம்மிடம் உபரியாக உள்ள செல்வத்தின்பால் தேவையுடையவர்கள் நம்மிடம் வந்து இறைஞ்சிக் கேட்க வந்துவிட்டால் நம் மனநிலை எப்படி மாறுதல் அடைகிறது? நாம் சுயபரிசோதனை செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆனால் இப்ராஹீம் (அவர்மீது இறைவனின் சாந்தி உண்டாகுக) அவர்களிடம் இறைவன் கேட்டது ஆச்சரியமான ஒன்று! ஆம், அவர் தள்ளாத வயதில் அற்புதமாகப் பெற்றெடுத்த மகனையல்லவா இறைவன் தனக்காக தியாகம் செய்யுமாறு கேட்டான்! அதுவும் அந்த ஆருயிர் மகனை அறுத்துப் பலியிடுமாறு இறைவன் பணித்தான்! அதையும் எவ்விதத் தயக்கமும் இன்றி நிறைவேற்றத் துணிந்தார் இப்ராஹீம் (அலை) அவர்கள். உடனேயே இறைவன் அவரது பரீட்சையில் அவர் வெற்றிபெற்று விட்டதை அறிவித்து அதற்குப் பகரமாக இரு ஆட்டை அறுத்துப் பலியிடுமாறு பணித்தான்.

இந்த விவரங்கள் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்படுகிறது:

**என் இறைவா! எனக்கு நல்லொழுக்கம் உடையவரை (வாரிசாகத்) தருவாயாக! (என்று இப்ராஹீம் கேட்டார்.) அவருக்கு சகிப்புத்தன்மை மிக்க ஆண் குழந்தை பற்றி நற்செய்தி கூறினோம். அவருடன் உழைக்கும் நிலையை அவர் (இஸ்மாயீல்) அடைந்த போது என் அருமை மகனே! நான் உன்னை அறுப்பது போல் கனவில் கண்டேன். நீ என்ன கருதுகிறாய் என்பதைச் சிந்தித்துக் கூறு'' என்று கேட்டார்.**

**என் தந்தையே! உங்களுக்குக் கட்டளையிடப்பட்டதைச் செய்யுங்கள்! அல்லாஹ் நாடினால் என்னைப் பொறுமையாளனாகக் காண்பீர்கள்'' என்று பதிலளித்தார்.**

**இருவரும் கீழ்ப்படிந்து (தமது) மகனை அவர் முகம் குப்புறக் கிடத்திய போது, இப்ராஹீமே! அக்கனவை நீர் உண்மைப்படுத்தி விட்டீர். நன்மை செய்வோருக்கு இவ்வாறே நாம் கூலி வழங்குவோம்'' என்று அவரை அழைத்துக் கூறினோம். இது தான் மகத்தான சோதனை. பெரிய பலிப்பிராணியை அவருக்குப் பகரமாக்கினோம்.பின்வருவோரில் அவரது புகழை நிலைக்கச் செய்தோம். இப்ராஹீமின் மீது ஸலாம் உண்டாகும்! நன்மை செய்வோருக்கு இவ்வாறே கூலி வழங்குவோம். அவர் நம்பிக்கை கொண்ட நமது அடியார்களில் ஒருவர். (அல்குர்ஆன் 37 : 100-111)**

அந்த தியாகச் செம்மலின் இச்செயலை உலகுள்ளவரை மனிதகுலம் என்றும் நினைவு கூர வேண்டும் அதிலிருந்து இறைவனுக்காக அனைத்தையும் அர்ப்பணிக்கும் பாடத்தை அவர்கள் பெறவேண்டும் என்பதற்காகவே வருடத்தில் ஒருமுறை அந்நாளைத் தியாகத் திருநாளாகக் கொண்டாடும்படி பணித்தான்.

இத்தியாகத்தின் ஆண்டுவிழாவைக் கொண்டாடும் முகமாக வசதியுள்ள அனைத்து இறைவிசுவாசிகளும் தங்களால் இயன்ற ஒரு ஆட்டையோ மாட்டையோ ஒட்டகத்தையோ பலிகொடுத்து அதன் இறைச்சியை உறவினர்களோடும் ஏழைகளோடும் பங்கிட்டு உண்ணுமாறு பணித்துடள்ளாள்ளான் இறைவன். மாட்டையும் ஆட்டையும் ஏழு பேர் சேர்ந்து கூட்டாகவும் பலி கொடுக்கலாம். இன்று செல்வ வளமுள்ள நாடுகளில் இவ்வாறு பலி கொடுக்கப்பட்ட கால்நடைகளின் இறைச்சி பதப்படுத்தப் பட்டு ஏழை நாடுகளில் உள்ள மக்களிடையே விநியோகம் செய்ய அனுப்பி வைக்கப்படுகிறது. ஏழைகளின் உணவுத் தேவை நிறைவேறுதல், சகோதர உணர்வு பகிர்தல் உறவினர்களோடு உறவைப் புதுப்பித்தல் என்பன போன்ற பல நன்மைகளை இந்நாள் தாங்கி வந்தாலும் இறைவன் முக்கியமாக பார்ப்பது நம் இறையச்ச உணர்வைத்தான். இதோ தனது திருமறையில் கூறுகிறான்:

**அவற்றின் மாமிசங்களோ, அவற்றின் இரத்தங்களோ அல்லாஹ்வை அடைவதில்லை. மாறாக உங்களிடமுள்ள (இறை) அச்சமே அவனைச் சென்றடையும். அல்லாஹ் உங்களுக்கு நேர் வழி காட்டியதற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்திட இவ்வாறே அதை அவன் உங்களுக்குப்**

பயன்படச் செய்தான். நன்மை செய்வோருக்கு நற்செய்தி கூறுவீராக! (அல்குர்ஆன் 22 : 37)

**நாம் பெறவேண்டிய பாடங்கள்**

இத்தியாகத் திருநாளில் முக்கியமாக நாம் பெறவேண்டிய பாடங்கள் இவையே:

- இந்த தற்காலிக உலகம் என்ற பரீட்சைக் கூடத்தில் நம்மைப் பரீட்சிப்பதற்காக நம்மிடம் அமானிதமாகத் தரப்பட்டுள்ளவையே நமது உயிரும், உடலும், உறவுகளும், உடமைகளும். இவற்றை நமது என்று சொல்லிக் கொண்டாலும் இவற்றின் உண்மை உரிமையாளன் இறைவன் மட்டுமே.

- இரவல் தந்தவன் இவற்றைத் திருப்பிக் கேட்கும்போதும் எடுக்கும்போதும் நாம் உணர்ச்சிவசப்பட்டு ஏசுவதோ அவனது சாபத்தைப் பெற்றுத் தரும் வார்த்தைகளோ உச்சரிப்பதோ கூடாது. அவ்வாறு நாம் அவற்றை இழக்க நேரிடும்போது பொறுமையை மேற்கொள்வதோடு இறைவன் இச்சோதனைக்கு நிச்சயமாக மறுமையில் பரிசு தருவான் என்ற உறுதியான நெஞ்சோடு இவற்றை எதிர்கொள்ள வேண்டும்.

2:155.-157. ஓரளவு அச்சத்தாலும், பசியாலும் செல்வங்கள், உயிர்கள், மற்றும் பலன்களைச் சேதப்படுத்தியும் உங்களைச் சோதிப்போம். பொறுத்துக் கொண்டோருக்கு நற்செய்தி கூறுவீராக! தமக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும் போது ''நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள் நாங்கள் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்'' என்று அவர்கள் கூறுவார்கள். அவர்களுக்கே தமது இறைவனின் அருள்களும், அன்பும் உள்ளன. அவர்களே நேர்வழி பெற்றோர்.

- எந்த அளவுக்கு இறைவனுக்கு நாம் இறைவனுக்கு நெருக்கமானவர்களாக ஆகிறோமோ அந்த அளவுக்கு அதிகமாக நாம் சோதிக்கப்படுவோம். எந்த அளவுக்கு நாம் சோதிக்கப்படுகிறோமோ அந்த அளவுக்கு இறைவனிடம் நமக்கு வெகுமதிகளும் உயர் பதவிகளும் காத்திருக்கின்றன.

- இப்ராஹீம்(அலை) அவர்கள் தனது ஆருயிர் மகனை இறைக் கட்டளைக்காக பலி கொடுக்கத் துணிந்தார்கள். நாம் குறைந்த பட்சம் நம் தேவை போக மேல்மிச்சமாக நம்மிடம் முடங்கிக் கிடக்கும் பொருளாதாரத்தை இறைவழியில் அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.

# நாவைப் பேணுங்கள்

- "நம்பிக்கையாளர்களே ! இறைவனை அஞ்சி நடந்து கொள்ளுங்கள். நேர்மையான சொல்லையே சொல்லுங்கள். (அவ்வாறு செய்தால்) உங்களுடைய செயல்களை உங்களுக்கு அவன் சீராக்கி வைத்து, உங்களுடைய பாவங்களையும் உங்களுக்கு மன்னிப்பான்". (அல்குர்ஆன் - 33: 70, 71)

- "(மனிதனுக்கு) வலப்புறத்திலும், இடப்புறத்திலும் அமர்ந்து எடுத்தெழுதும் இரு(வான)வர் எடுத்தெழுதும்போது (எழுதுவதற்கு) தயாராக இருக்கின்ற கண்காணிப்பாளர் ஒருவர் அவனிடத்தில் இருந்தே தவிர, எந்தச் சொல்லையும் அவன் மொழிவதில்லை". (அல்குர்ஆன்- 50: 17, 18)

**உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமா?**

# பாவபுண்ணியங்களை தீர்மானிப்பது யார்?

உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமா? - இக்கேள்விக்கு பதில் காண்பதற்கு முன்னால் நாம் பாவம் எது, புண்ணியம் எது என்பதை தீர்மானிக்க ஒரு அளவுகோலைக் கண்டறியக் கடமைப் பட்டுள்ளோம்.

நம்மில் பலரும் பல மதங்களையும் கொள்கைகளையும் சார்ந்தவர்களாக உள்ளோம். ஒருவருக்குப் பாவமாகப்படுவது மற்றவர்களுக்குப் பாவமாகப் படுவதில்லை. அதுபோலவே ஒரு சாராருக்குப் புண்ணியமாகப் படுவது மற்றவர்களால் பாவமாகவோ அருவருக்கத்தக்கச் செயலாகவோ எண்ணப்படுகிறது. சிலர் மனசாட்சிதான் நீதிபதி என்பார்கள். சிலர் தன் இனத்தவர் அல்லது மொழியினர் அல்லது நாட்டவர் அல்லது மதத்தவர் எது செய்தாலும் அதை எப்போது சரி காண்பார்கள். சிலர் பெரும்பான்மை என்ன கூறுகிறதோ அதையே சரி அல்லது தவறு என்பார்கள். சிலருக்கு அவர்களின் அரசியல் தலைவர்களின் கூற்று, சிலருக்கு ஆன்மீக குருக்களின் கூற்று, சிலருக்கு ஆட்சித்தலைவர்கள் கூற்று என்பவையே வேத வாக்குகள். சில இடங்களில் ஆதிக்க சக்திகளோ அடக்குமுறை செய்வோரோ ரவுடிகளோ என்ன சொல்கிறார்களோ அதை மிஞ்சும் சொல் எதுவும் இல்லை!

இவ்வாறு எந்த வழியில் நாம் நன்மை - தீமை அல்லது பாவம் - புண்ணியம் பற்றி ஆராய்ந்தாலும் நமக்கு மிஞ்சுவது குழப்பமே என்பதை உணரலாம். எனவே இந்த விடயத்தில் குழப்பமற்ற தெளிவான முடிவுக்கு வர ஒரே வழிமுறை இதுதான்:

## உலகத்தின் அதிபதியே நீதிபதி

யார் இவ்வுலகிற்கும் அதில் உள்ளவற்றிர்க்கும் சொந்தக்காரனோ அதிபதியோ அவன் எதை நமக்கு நன்மை என்றும் அல்லது நமக்குத் தீமை என்றும் சொல்கிறானோ அதுவே உண்மையிலும் உண்மை. காரணம் அவன்தான் இப்பேரண்டம் அனைத்தையும் அவற்றில் உள்ள சிறிதும் பெரிதுமான அனைத்து படைப்பினங்களையும் படைத்து இயக்கிப் பரிபாலித்து வருபவன். அவன் மட்டுமே முக்காலத்தையும் உணர்ந்தவன் மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் பற்றிய முழுமையான அறிவுள்ளவன். அவனது அறிவு அனைத்தையும் சூழ்ந்தது. மனிதனுக்கும் மனித குலத்துக்கும் மட்டுமல்ல மற்ற அனைத்துப் படைப்பினங்களுக்கும் எது நல்லது எது கெட்டது என்பதை மிக மிகப் பக்குவமாக அறிபவன் அந்த இறைவன் மட்டுமே. ஒவ்வொரு நுண்ணிய படைப்பினங்களுக்கும் பின்னால் உள்ள நோக்கத்தையும் அவற்றின் தேவைகளையும் உரிமைகளையும் அதிபக்குவமாக அறிபவனும் பங்கீடு செய்பவனும் அவனே.

எனவே நம் பரிபாலகன் எவற்றை நமக்கு நல்லது என்று பரிந்துரை செய்கிறானோ அவற்றை ஏற்பதும் எவற்றை நமக்குத் தீமை என்று சொல்லி அவற்றை செயயாதே என்று சொல்லி நம்மைத் தடுக்கிறானோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதும்தான் அறிவுடைமை.

## வாழ்க்கை ஒரு பரீட்சை

அது மட்டுமல்ல, இந்தக் குறுகிய தற்காலிகமான வாழ்வை ஒரு பரீட்சையாகவும் இந்த உலகை அதற்கான பரீட்சைக் கூடமாகவும் இறைவன் அமைத்துள்ளதையும் நாம் மறந்து விடக்கூடாது.

● **62:2.** உங்களில் அழகிய செயலுக்குரியவர் யார் என்பதைச் சோதிப்பதற்காக மரணத்தையும், வாழ்வையும் அவன் படைத்தான். அவன் மிகைத்தவன்மன்னிப்பவன்.

இந்தப் பரீட்சைக் களத்தில் அந்த இறைவன் எதைச் செய் என்று சொல்கிறானோ அதுவே புண்ணியம் என்பது. அவன் எதைச் செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே பாவம் என்பது! மாறாக எந்த மனிதனும் மனிதர்களின் குழுக்களும் நீதிமன்றங்களும் சட்டசபைகளும் பாராளுமன்றங்களும் இன்ன பிற ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்களும் பாவ-புண்ணியங்கள் எவை என்பதைத் தீர்மானிக்க முடியாது. காரணம் இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதி இறைவன் மட்டுமே. அன்று அவனே நமது வாழ்க்கையில் நாம் செய்த புண்ணியங்களையும் பாவங்களையும் கணக்கிட்டு அதன் அடிப்படையில் நமக்கு சொர்க்கத்தையோ நரகத்தையோ விதிக்க இருக்கிறான். அதுவே நமது நிரந்தர வாழ்விடம்!

ஆக, சர்வ வல்லமையும் நுண்ணறிவும் அனைத்து ஆட்சியும் அதிகாரமும் கொண்ட இறைவன் நமக்காக எதைப் பரிந்துரைக்கிறானோ அதன்படி பாவ புண்ணியங்களை தீர்மானித்து அதனடிப்படையில் நம் வாழ்வை அமைத்துக் கொண்டால் இவ்வுலக வாழ்விலும் அமைதியைப் பெறலாம். மறுமை வாழ்விலும் அவன் நமக்குப் பரிசாக வழங்கும் சொர்க்கத்தை அடையலாம். இவ்வுண்மையை மறுத்து நம் மனோ இச்சைகளுக்கும் முன்னோரின் பழக்கவழக்கங்களுககும் இன்னபிற சக்திகளுக்கும் செவிசாய்த்து நாம் வாழ்ந்தால் மிஞ்சுவது இவ்வுலகில் குழப்பமும் அமைதியின்மையும் கலவரங்களுமே. மறுமையிலோ இறைவனின் கோபத்தையும் அவனது தண்டனையாக நரகத்தையுமே அடைய நேரிடும்.

● **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)**

# உங்களுக்காகவே உண்டானவை

● **23:21.** நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய) பிராணிகளில் ஒரு படிப்பினை இருக்கிறது. அவற்றின் வயிறுகளிலிருந்து (சுரக்கும் பாலை) நாம் உங்களுக்கு புகட்டுகிறோம் இன்னும் அவற்றில் உங்களுக்கு அநேக பயன்கள் இருக்கின்றன அவற்றி(ன் மாமிசத்தி)லிருந்து நீங்கள் புசிக்கின்றீர்கள்.

● **35:12.** இன்னும் இரண்டு கடல்கள் சமமாகா. ஒன்று மிகவும் இனிமையாக, (தாகம்தீரக்) குடிப்பதற்குச் சுவையாக இருக்கிறது மற்றொன்று உவர்ப்பாக, கசப்பாக இருக்கிறது. எனினும் இவை ஒவ்வொன்றிலிருந்தும் நீங்கள் சுவையான (மீன்) மாமிசத்தை உண்ணுகிறீர்கள். இன்னும், (முத்து, பவளம் போன்ற) ஆபரணமாக நீங்கள் அணிவதையும் எடுத்துக் கொள்கிறீர்கள் மேலும் (அல்லாஹ்வின்) அருளை நீங்கள் தேடிக்கொள்வதற்காக (நீங்கள் பிரயாணம் செய்யும் போது) கப்பல்கள் நீரைப்பிளந்து செல்வதையும் நீங்கள் காண்கிறீர்கள் - இதற்கு நீங்கள் நன்றி செலுத்துவீர்களாக!

உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமா?

# இறைவனின் பார்வையில் இது பாவமல்ல!

இவ்வுலகின் சொந்தக்காரனான இறைவன் தனது எவல்விலக்கல்களை மனிதகுலத்துக்கு அறிவிக்கவும் அதன்படி முன்னுதாரணமாக வாழ்ந்துகாட்டவும் தனது தூதர்களையும் அவர்கள் மூலம் வேதங்களையும் அனுப்பி வந்துள்ளான். அந்த தூதர்கள் வரிசையில் இவ்வுலகுக்கு இறுதியாக வந்தவர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள். அவர்கள் மூலமாக அருளப்பட்ட வேதமே திருக்குர்ஆன். திருக்குர்ஆனுக்கு இன்னொரு பெயர் ஃபுர்கான் என்பது.

**25:1. உலகத்தார் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக (நன்மை தீமைகளைத் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இவ்வேதத்தைத் தன் அடியார் மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன்.**

**25:2. (அந்த நாயன்) எத்தகையவன் என்றால் வானங்கள், பூமி (ஆகியவற்றின்) ஆட்சி அவனுக்கே உரியது. அவன் (தனக்கென) ஒரு மகனை எடுத்துக் கொள்ளவில்லை. அவனுடைய ஆட்சியில் அவனுக்கு கூட்டாளி எவருமில்லை. அவனே எல்லாப் பொருட்களையும் படைத்து, அவற்றை அதனதன் அளவுப் படி அமைத்தான்.**

உணவு விடயத்தில் மட்டுமல்ல மனித வாழ்வியலோடு தொடர்புடைய எந்த ஒரு காரியத்திலும் நன்மை எது தீமை எது அல்லது சரி எது தவறு எது என்பதை அறிய இன்று வாழும் மனிதர்கள் அணுகவேண்டிய இரண்டு ஆதாரங்கள் திருக்குர்ஆனும் அதன் செயல்முறை விளக்கமாக வாழ்ந்துகாட்டிய நபிகளாரின் வாழ்க்கை வழிமுறையும் ஆகும்.

சக மனிதனோடும் சரி, இன்ன பிற ஜீவிகளோடும் சரி, அவை பெரிதானாலும் சிறியதானாலும் சரி அன்போடு அணுகவே இறைவன் நம்மோடு கற்பிக்கிறான். எந்த ஒரு உயிரையும் நியாயமான காரணம் இன்றி கொல்வது பாவமாகும் என திருக்குர்ஆனும் நபிமொழிகளும் கூறுகின்றன.

- **'வாருங்கள்! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடை செய்ததைக் கூறுகிறேன்'' என்று (முஹம்மதே!) கூறுவீராக! அது, ''நீங்கள் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்கக் கூடாது'' என்பதே. பெற்றோருக்கு உதவுங்கள்! வறுமையின் காரணமாக உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்! உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். வெட்கக்கேடான காரியங்களில் வெளிப்படையானதையும், இரகசியமானதையும் நெருங்காதீர்கள்! அல்லாஹ் தடை செய்துள்ளதால் எவரையும் (அதற்கான) உரிமை இருந்தால் தவிர கொல்லாதீர்கள்! நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான்..... (அல்குர்ஆன் 6 : 151)**

- **நபி (ஸல்)அவர்கள், ''பேரழிவை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங்களைத் தவிர்த்துவிடுங்கள்'' என்று கூறினார்கள். மக்கள், ''அல்லாஹ்வின் தூதரே! அவை யாவை?'' என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், ''அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பது, சூனியம் செய்வது, முறையின்றி கொல்லக் கூடாதென அல்லாஹ் புனிதப்படுத்திய உயிரைக் கொல்வது, வட்டியைப் புசிப்பது, அநாதைகளின் செல்வத்தை உண்பது, போரின்போது புறமுதுகிட்டு ஓடுவது, இறைநம்பிக்கை கொண்ட அப்பாவிகளான பத்தினிப் பெண்கள் மீது அவதூறு கூறுவது ஆகியவையே அந்தப் பெரும் பாவங்கள் என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் : (புகாரி 6857)**

**உணவுக்காக கொல்வது பற்றி....**

அதேவேளையில் உணவுக்காக விலங்குகளைக் கொல்வது பாவமல்ல என்பதை மேற்படி ஆதாரங்களில் இருந்து அறியலாம். திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

● 'இறைவிசுவாசிகளே! (நீங்கள் செய்து கொண்ட) உடன்படிக்கைகளை (முழுமையாக நிறைவேற்றுங்கள். உங்கள் மீது ஓதிக்காட்டி இருப்பவைத் தவிர மற்றைய நாற்கால் பிராணிகள் உங்களுக்கு (உணவிற்காக) ஆகுமாக்கப் பட்டுள்ளன" ( திருக்குர்ஆன் 5:1)

● 'கால்நடைகளையும் அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்குக் கதகதப்பு(ள்ள ஆடையணிகளு)ம் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கின்றீர்கள்.' (திருக்குர்ஆன் 16:5)

● 'நிச்சயமாக உங்களுக்கு பிராணிகளில் ஒரு படிப்பினை இருக்கிறது. அவற்றின் வயிறுகளிலிருந்து (சுரக்கும் பாலை) நாம் உங்களுக்குப் புகட்டுகிறோம். இன்னும் அவற்றில் உங்களுக்கு அநேக பயன்கள் இருக்கின்றன. அவற்றி(ன் மாமிசத்தி)லிருந்து நீங்கள் புசிக்கிறீர்கள்.' மூ (திருக்குர்ஆன் 23:21)

**முந்தைய வேதங்களிலும் புலால் உண்பது பாவமல்ல**

ஒரு காலத்திலும் புலால் உண்பதை இறைவன் தடுத்ததாக எங்கும் நீங்கள் காண முடியாது. உண்மையில் இந்து மதத்தின் சட்ட நூலாகக் கருதப்படும் மனுசாஸ்திரம் இவ்வாறு கூறுகிறது

● 'உணவு உட்கொள்பவர் - மாமிச உணவு உட்கொள்வாராயின் - அவர் உண்ணும் மாமிச உணவு அவருக்கு எந்த கெடுதியும் அளிப்பதில்லை. எந்நாளும் மாமிச உணவை உட்கொண்டாலும் சரியே. ஏனெனில் சில படைப்புகளை உண்பதற்காகவும் - சில படைப்புகளை உண்ணப்படுவதற்காகவும் படைத்தவன் கடவுளே'. (ஐந்தாவது அத்தியாயம் முப்பதாவது வசனம்)

● 'மாமிச உணவு உண்பதும் - சரியான தியாகமே. இது மரபு ரீதியாக அறியப்பட்டு வரும் கடவுளின் கட்டளையாகும்'. (5:39)

● 'பலியிடுவதற்கென கடவுள் சில கால்நடைகளை படைத்திருக்கின்றான். எனவே பலியிடுவதற்காக கால்நடைகளை அறுப்பது என்பது - கால்நடைகளை கொல்வது ஆகாது.'(5:40)

# நாவடக்கம்

● "யார் தனது இரு தாடைகளுக்கிடையே உள்ளதை (நாவை)யும், இரு தொடைகளுக்கிடையே உள்ளதை (மர்மஸ்தானத்தை)யும் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றுக் கொள்கிறாரோ, அவருக்கு சுவனம் கிடைத்திட நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்." என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பவர்: ஸஹ்ல் இப்னு ஸ.்.த்(ரலி) , நூல்கள்: புகாரி, முஸ்லிம்)

● "இறைத்தூதரே ! நான் தொடர்ந்து பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டிய ஒன்றை எனக்குச் சொல்லித் தாருங்கள்" என்றேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "எனது இரட்சகன் அல்லாஹ் என்று கூறி, பின் அதிலேயே நிலைத்திரும்" என்றனர். (மீண்டும்) "இறைத்தூதரே , என்மீது நீங்கள் பயப்படக்கூடிய மிகப் பயங்கரமான விடயம் எது" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் தமது நாவைப் பிடித்து, "இதைத்தான் (பயப்படுகிறேன்)" எனக் கூறினர். (அறிவிப்பவர்: ஸுஃப்யான் பின் அப்துல்லாஹ் (ரலி), நூல்: திர்மிதி)


# உணவுச் சங்கிலி (Food Chain)

**● அவனே (யாவற்றையும்) படைத்தான் மேலும் செவ்வையாக்கினான். மேலும், அவனே (அவற்றுக்கு வேண்டிய அனைத்தையும்) அளவுபட நிர்ணயிதான் (அவற்றைப் பெறுவதற்கு) நேர்வழி காட்டினான்.**

**(திருக்குர்ஆன் 87:2,3)**

உலகில் வாழும் எந்த ஒரு உயிரினத்துக்கும், உணவு என்பது பொதுவாகவே மற்றொரு உயிரினம்தான். பலமான உயிரினங்கள் பலவீனமான உயிரினங்களை உண்டு வாழ்கின்றன. உதாரணமாக புழுபூச்சிகள் அவற்றைவிட சிறிய உயிரினங்களை உண்டு வாழ்கின்றன. புழு பூச்சிகளைத் தவளைகள் உண்கின்றன. தவளை பாம்புகளுக்கு உணவாகிறது. பாம்புகளை கழுகுகள் பதம் பார்க்கின்றன. கழுகுகள் இறந்தால் அவற்றின் உடல்கள் நுண்கிருமிகளுக்கு உணவாகின்றன. அவ்வுடல்கள் மண்ணினால் அரிக்கப்பட்டு மண்ணோடு மண்ணாக கலந்து விடுகின்றன. அவை அங்கு வளரும் தாவரங்களுக்கு உரமாகின்றன.

அதே போல மான்கள் முயல்கள் மற்றும் ஆடுகள் போன்றவை தாவரங்களை உண்டு வளர்கின்றன. அவற்றை சிங்கம், புலி போன்றவை வேட்டையாடி உண்ணுகின்றன. ... அந்தச் சிங்கம் இறந்துவிட்டால் அதன் உடலை நரிகள் உண்கின்றன. இதைத்தான் உணவுச் சங்கிலி (Food Chain). என்கிறது அறிவியல்! இவை ஒரு சில குறிப்பிட்ட வகையான விலங்குகளின்




**தரைவாழ் உயிரினங்கள் உணவுச் சங்கிலி உதாரணம்**

தொடர்புகளை சீர்படுத்துவதற்கும் முக்கியமான அம்சமாக விளங்குவது உணவு சங்கிலிதான். இந்த பூமி உருண்டையின் மூன்றில் இரண்டு பங்கு கடலால் சூழப்பட்டுள்ளது. தரைவாழ் உயிரினங்களானாலும் கடல்வாழ் மற்றும் கரைவாழ் உயிரினங்களானாலும் இதுவே நியதி.

கடலில் வாழக்கூடிய முட்டை இடும் உயிரினங்களுள் அதிகமான முட்டையிடும் வகை மீனான oceans sunfish அதன் ஒரு இனப் பெருக்க காலத்தில் முப்பது கோடி முட்டைகள் வரை இடும், அதே போன்று ஒரு சிப்பியானது (oyster) அதன் வாழ் நாளில் 20 லட்சம் முட்டைகள் வரை இடும், . அப்படி இருந்தும் கடலை மூடக்கூடிய அளவிற்கு மீன்கள் இல்லையே ஏன்? ஏனெனில் அந்த மீன்களை சாப்பிடுகிற மற்ற மீன்கள் இருக்கின்றன, அந்த வேறொரு இன மீன்கள் இந்த வகை மீன்களை அதன் எண்ணிக்கைக்கு மேல் அதிகமாகி விடாமல் சமநிலையை தக்க வைத்து கொள்கின்றன.

இந்த உணவு சுழற்சியில் ஏதாவது ஒன்று நின்று போனாலே உலகம் பல பிரச்னைகளை சந்திக்க வேண்டி வரும். கோழிகளும், ஆடுகளும், மாடுகளும், மீன்களும் கோடிக்கணக்கில் ஒரு நாளில் மனிதனால் உணவுக்காக வெட்டப்படுகின்றன. ஜீவகாருண்யம் பேசிக் கொண்டு இவற்றை சாப்பிடாமல் இருந்தால் இந்த இனங்கள் அதிகம் பெருகி சுற்று சூழலுக்கு மிகக் கேடாக முடியும். மேலும் இத்தனை கோடி ஆடு, மாடு, கோழி, மீன் போன்ற உயிரினங்கள் மனிதனால் வெட்டப்பட்டாலும் இவற்றின் எண்ணிக்கை எந்த நாட்டிலும் குறைந்ததாக காணோம். அதிகரித்த வண்ணமே இருக்கிறது. மனிதன் சாப்பிடாத புலி, சிங்கம் போன்ற உயிரினங்கள் ஆண்டு தோறும் குறைந்து வருவதையும் பார்க்கிறோம். அதே போல் காட்டில் காட்டெருமை, மான், வரிக் குதிரை போன்ற மிருகங்களை சிங்கம் புலி போன்றவை அடித்து சாப்பிடுவதால்தான் காட்டின் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுகிறது. இல்லை என்றால் இலை தழைகளை சாப்பிடும் இந்த மிருகங்கள் முழு காட்டையும் சாப்பிட்டே அழித்து விடும். அந்த அளவு இனப்பெருக்கமும் அதிகமாக பண்ணும் இந்த உயிரினங்கள்.

**அடிபட்டுப்போகும் பரிணாமவியல் கொள்கை**

இதில் பரிணாமிவியலின் கொள்கைகளும் அடிபட்டுப் போகின்றன. பரிணாமவியல் சொல்வதென்ன? முதலில் ஒரு செல் உயிரிகள் உற்பத்தியாகி கடலிலிருந்து பரிணமித்து நீர் நில உயிரினமாக மாறி பல தரப்பட்ட உருமாற்றம் அடைந்து குரங்கு வரை வந்து அதன் பிறகு பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் இன்றுள்ள மனித இனம் உருவானதாக சொல்கிறது. அறிவியல் முடிவுகளின் விளக்கங்களின் படி இது சாத்தியமே இல்லை. ஒரே நேரத்தில் உலக உயிரினங்கள் அனைத்தும் உண்டாக்கப்பட்டிருந்தால் தான் இன்று வரை உலக உயிரினங்கள் ஜீவித்திருந்திருக்க முடியும். டார்வினின் தத்துவம் இந்த இடத்திலும் சறுக்கி விடுகிறது. நன்றி: சுவனப் பிரியன்

# நா காக்காவிடின் நரகமா?

● ”அடியான் இறைவனுக்கு விருப்பமான ஒரு சொல்லை நாவினால் மொழிகின்றான். ஆனால் அதில் அவன் கவனம் செலுத்துவதில்லை. எனினும் அந்தச் சொல்லின் காரணத்தால் இறைவன் அவனது தகுதியை உயர்த்திவிடுகிறான். இவ்வாறே அடியான் இறைவனுக்குக் கோபம் உண்டாக்கக் கூடிய ஒரு சொல்லை அலட்சியமாகச் சொல்லிவிடுகிறான். அச்சொல்லே அவனை நரகில் தள்ளிவிடுகிறது”.என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி) , நூல்: புகாரி)

# கால்நடைகளைக் கொல்வதும் ஜீவகாருண்யமே!

உயிரினங்களை உரிய முறையில் அறுத்து உண்பதை இறைவன் அனுமதித்து உள்ளான். இந்த அனுமதியின் பின்னால் உள்ள உண்மைகளையும் நுணுக்கங்களையும் திட்டங்களையும் அவன் மட்டுமே முழுமையாக அறிவான். அவனது திட்டங்களுக்கு ஒரு மாற்று ஏற்பாட்டை பரிந்துரைக்கும் நிலையில் நாம் இல்லை என்பது உறுதி.

குழந்தை பிறப்பு, பக்ரீத், ஹஜ் போன்ற சிறப்பு சந்தர்ப்பங்களில் உயிர்ப் பிராணிகளை அறுத்துப் பிறருக்கு உண்பதற்காக அளிப்பதை வணக்கமாகக் கற்பிக்கிறது இறைவனின் மார்க்கம் இஸ்லாம். ஆயினும் சகல உயிர்கள் மீதும் காருண்யத்தைக் காட்டுவது இஸ்லாத்தில் கடமையாகும். உண்மையில் இன்று பசுவதைத் தடை செய்யப்பட்ட மாநிலங்களில் பசுக்கள் அதன் உரிமையாளர்களால் கைவிடப்பட்டு பட்டினிச்சாவுக்கு ஆளாக்கப்படும் நிலையைக் காண்போருக்கு இஸ்லாம் கற்பிக்கும் ஜீவகாருண்யத்தின் அருமை புரியும். ஆம், பால்தராத பசுக்களை இஸ்லாம் கூறும் முறைப்படி அறுப்பதுதான் அதன்மீது காட்டும் ஜீவகாருண்யம்! அது மக்களை மதங்களின் பெயரால் பிரித்தாளவும் சுரண்டவும் முற்படும் சுயநல சக்திகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் அவர்களால் ஏமாற்றப்படும் பாமரர்களுக்கும் புரிவதில்லை.

பால்தராத பசுவையோ உழுவதற்குத் தகுதியற்ற காளையையோ இறைச்சி உண்போருக்கு விற்றால்தான் அடுத்த பிராணியை வாங்கி தன் தொழிலை மேற்கொண்டு தொடருவான் ஏழை விவசாயி. ஆனால் அவன் பிழைப்பில் மண்ணைப் போட்டு அரசியல் செய்வோர்தான் இன்று ஜீவகாருண்யம் என்ற பெயரில் இஸ்லாம் கற்பிக்கும் உயிர்பலிகளை கொடூரமானது என்று விமர்சிக்கிறார்கள், பரப்புரை செய்கிறார்கள்.

### இஸ்லாமிய நிலைப்பாடு

● “பூமியில் உள்ளவை மீது அன்பு காட்டுங்கள், வானத்தில் உள்ளவன் உங்கள் மீது அன்பு காட்டுவான்” என்பது நபிமொழி (திர்மிதி)

● தாகத்தோடு இருந்த நாயொன்றுக்கு நீர் புகட்டியதற்காக முன் சென்ற சமூகத்தில் ஒருவரின் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று நபி(ஸல்)) அவர்கள் கூறிய போது “கால்நடைகளுக்கு உதவியதற்கும் நற் கூலி உண்டா? எனத் தோழர்கள் வினவினர். அதற்கு உயிருள்ள இதயமுள்ள எதற்கு உதவி செய்தாலும் நன்மை உண்டு எனக் கூறினார்கள்” (புஹாரி: 2303)

● “ஒரு பெண் பூனையொன்றைக் கட்டிப் போட்டு தானாக அதற்கு உணவு கொடுக்காமலும் பூனை தானாகத் தன் உணவைத் தேடிக் கொள்ள அவிழ்த்து விடாமலும் இருந்தாள். அந்தப் பூனை செத்துவிட்டது. இதைச் செய்த பெண் நரகம் நுழைவாள்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி: 2365)

இவ்வாறான ஏராளமான நபிமொழிகள் உயிரினங்களிடம் அன்பும், பரிவும் காட்டுவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. நபி(ஸல்) அவர்கள் அன்றைய அரேபியர்களிடம் காணப்பட்ட ஜீவகாருண்யத்திற்கு எதிரான அனைத்துச் செயல்களையும் தடுத்தார்கள்.

● “அன்று அரேபியர் அம்பெறிந்து பழகுவதற்கு உயிரினங்களையே இலக்காகக் கொண்டனர். இச்செயலை நபி(ஸல்) அவர்கள் தடுத்ததுடன்

இவ்வாறு செய்பவர்களை சபிக்கவும் செய்தார்கள் (முஸ்லிம், புஹாரி :5515)

● இவ்வாறே அன்றைய அரேபியர் விருந்தாளிகள் வந்தால் முழு ஒட்டகத்தையும் அறுக்க முடியாது, குறைந்த மாமிசம் வாங்க முடியாது என்ற நிலையில் உயிருடனுள்ள ஒட்டகத்தில் ஒரு துண்டை வெட்டியெடுத்துச் சமைப்பர். நபி(ஸல்) அவர்கள் இதை வன்மையாகக் கண்டித்து இவ்வாறு பெறப்பட்ட மாமிசத்தைப் புசிப்பதும் ஹராம்(சட்ட விரோதமானது) என்றார்கள்.

இவ்வாறு உயிரினங்களுக்கு உரிய முறையில் உணவு, நீர் கொடுக்காதிருந்தால், அதன் சக்திக்கு மீறி அவற்றிடம் வேலை வாங்குதல், ஓய்வு கொடுக்காதிருத்தல், குட்டியையும் தாயையும் பிரித்தல் போன்ற பல அம்சங்களையும் தடுத்துள்ளார்கள்.

இவற்றையெல்லாம் தடுத்து ஜீவகாருண்யத்தை ஏவினாலும் மனித உணவுத் தேவை கருதி இஸ்லாம் சில உயிரினங்களை உரிய முதலில் அறுத்து உண்பதை அனுமதித்துள்ளது. இதை இஸ்லாம் மட்டும் அனுமதிக்கவில்லை. சர்வ சமயங்களும் மாமிசம் உண்பதை அனுமதித்தேயுள்ளன. ஆதி மனிதனது ஆரம்ப உணவில் கூட மாமிசமே முதலிடம் வகித்தது.

# பலிப்பிராணியிடம் ஜீவகாருண்யம்

குர்பானுக்கு (பலியிடுவதற்கு) முன்னர் மிருகங்களை ஆறுதலாக இருக்க விட வேண்டும். தொழுவங்களில், கட்டி வைக்கும் இடத்தில் அவற்றை நெருக்கமாக வைத்திருக்கலாகாது. அவற்றிற்குத் தேவையான நீர், ஆகாரம் என்பன உரிய முறையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். கத்தியை நன்றாகக் கூர்மையாக்குவது, அல்லாஹ்வின் பெயரைக் கூறுவது, ஏனைய மிருகங்கள் பார்த்திருக்கும்போது அறுக்காதிருப்பது, மிருகத்தை கிப்லா திசைக்கு திருப்பிக் கொண்டு ஒரு புறம் சாய்த்து அறுப்பது என்பன எல்லாம் இஸ்லாம் வலியுறுத்தும் செயல்களாகும்.

● ஒருவர் ஆடொன்றை அறுப்பதற்காக பூமியில் கிடத்தி விட்டு கத்தியைத் தீட்டிக் கொண்டிருப்பதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், "அதனை நீ இரண்டு தடவை கொல்ல விரும்புகிறாயா? அதனைக் கிடத்துவதற்கு முன்னர் அதனை (கத்தியை) நீர் கூர்மையாக்கியிருக்கவில்லையா என்று வினவினார்கள்." (ஆதாரம்: ஹாகிம், தபரானி)

● ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம், "நான் ஒரு ஆட்டை அறுக்கும்போது அதன் மீது இரக்கம் காட்டுகிறேன்" என்றார், அப்போது நபியவர்கள் "ஆட்டுக்கு நீ இரக்கம் காட்டினால் இறைவன் உன் மீது இரக்கம் காட்டுவான்" என்றார்கள். (ஆதாரம் அஹ்மத்)



● இன்னுமொரு தடவை நபி (ஸல்) அவர்கள் "இறைவன் ஒவ்வொரு காரியத்தையும் திறம்படச் செய்வதைக் கடமையாக்கியிருக்கிறான். நீங்கள் (மிருகங்களை) கொல்லும்போது அதனை முறையாகச் செய்யுங்கள். நீங்கள் அறுத்தால் முறையாக அறுங்கள். உங்களில் ஒருவர் தனது கத்தியைக் கூர்மையாக்கிக் கொள்ளட்டும். தனது அறுப்புக்கான மிருகத்துக்கு ஓய்வு கொடுக்கட்டும்" என்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமா?

# மனிதனுக்கும் விலங்கினத்துக்கும் அநீதி!

இறைவனின் பார்வையில் உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமல்ல என்பதை இறைவேதங்கள் மூலம் அறிகிறோம். இருந்தாலும் உயிரினங்கள் அறுபடும்போதும் துடிக்கும்போதும் நம்மால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லையே! ஆம், இறைவன் இதை வாழ்க்கை என்ற பரீட்சையில் ஒரு சோதனையாக அமைத்துள்ளான். அப்போது ஏற்படும் நம் உள்ளத்தில் ஏற்படும் இரக்க உணர்வுக்கும் நமக்கு கூலி வழங்கப் படுகிறது என்கிறார்கள் நபிகளார். அந்த இரக்க உணர்வை நம் உள்ளத்தில் விதைத்த அந்தக் கருணையாளனே உணவுக்காக கால்நடைகளைக் கொல்ல அனுமதிக்கவும் செய்துள்ளான், அதை பலி என்ற முறையில் நாம் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமையாகவும் ஆக்கியுள்ளான்.

### கொல்லாது விட்டால் கொடும் பாவம்

நமது அற்ப அறிவுக்கு ஒருவேளை இது பாவமாகத் தோன்றி கால்நடைகளைக் கொல்லாமல் விட்டுவிட்டால் அந்த விலங்கினத்துக்கு எதிராகச் செய்யும் அநீதியாகவும் அமைந்துவிடும். உதாரணமாக, ஒரு ஏழை விவசாயி தன் வயதான மாட்டை விற்றால்தான் வேறு காளையை வாங்கமுடியும். தன் தொழிலைத் தொடரவும் முடியும். அதை விற்கச் சந்தைக்குக் கொண்டு வருகிறார். ஒரு இறைச்சிக்கடைக் காரர் வாங்கவும் தயாராக உள்ளார். அப்போது பசுவதைத் தடைச் சட்டம் என்ற பெயரில் இதை நாம் தடுத்தால் என்ன நடக்கும்?

ஆம், சந்தேகமின்றி அந்த ஏழை விவசாயியின் பிழைப்பில் அநியாயமாக மண்ணைப் போடுகிறோம். காலாகாலமாக தன் வயதான பால் தராத பசுவை அல்லது உழுவதற்குத் சக்தியற்ற மாட்டை சந்தையில் இறைச்சிக்கடைக் காரர்களுக்கு விற்றுதான் வேறு காளையை வாங்கி வந்தார். ஆனால் இப்போது அவரால் தன் கால்நடையை விற்க முடியாமல் தன் வீட்டிற்கே கொண்டுவர வேண்டிய நிலைமை. அவரது பிழைப்பில் மண் விழுந்ததோடு விபரீதம் முடிவதில்லை. அந்தப் பிராணிக்கு யார் உணவளிப்பது?

அவருக்கே உணவுக்கு திண்டாட்டமாக இருக்கும்போது அந்த மாட்டுக்கு அவரால் உணவளிக்க முடியுமா? அவர் அதைப் பராமரிக்க முடியாத நிலையில் கட்டவிழ்த்து விட்டால் அடுத்தவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இரையாகிறார். வேறுவழியின்றி கட்டிப்போட்டால் அது பசியால் துடிதுடித்து படிப்படியாக இறக்கிறது. இதுதான் மனிதாபிமானமா?....... இவ்வாறு ஒன்றுக்குப் பின் ஒன்றாக தொடர் விபரீதங்களுக்கு நாம் காரணமாகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த அனைத்து அநீதிகளுக்கும் பாவங்களுக்கும் மறுமையில் இறைவனின தண்டனையும் கிடைக்கும். அது நரக நெருப்பல்லாமல் வேறு என்ன?

### சட்டம் இயற்றும் அதிகாரம் நம்மிடம் இல்லை!

இயற்கையில் செடிகொடிகள் புல்பூண்டு முதல் வளர்வன அனைத்தும் உயிரினங்களே. பலவீனமான உயிரினங்களை பலமான உயிரினங்களுக்கு உணவாக இறைவன் படைத்திருக்கிறான் என்பதை சற்று சிந்தித்தாலே அறியலாம். இந்த ஏற்பாட்டின் சூட்சுமம் அவன் மட்டுமே அறிவான். புலியிடம் ‘இன்று முதல் நீ புல்லை மட்டும்தான் உண்ணவேண்டும்!’ மானிடம் ‘நீ நீரை மட்டுமே அருந்தி உயிர் வாழ்!’ என்றோ கட்டளையிட நமக்கு அதிகாரமில்லை என்பதை அறிவோம். நம் அற்ப அறிவின் அடிப்படையில் இதில் தலையிட்டு

மாற்றங்கள் செய்ய நினைத்தால் பல விபரீதங்கள் ஏற்படும். அதனால் உண்டாகும் விளைவுகளுக்கு கண்டிப்பாக இறுதித்தீர்ப்பு நாளன்று குற்றம் பிடிக்கப்படுவோம்.

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

● **7:56. (மேலும்,) பூமியில் (அமைதி உண்டாகி) சீர்திருத்தம் ஏற்பட்ட பின்னர் அதில் குழப்பம் உண்டாக்காதீர்கள் அச்சத்தோடும் ஆசையோடும் அவனை பிரார்த்தியுங்கள் - நிச்சயமாக அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு மிக சமீபத்தில் இருக்கிறது.**

---

**உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமா?**

# மனித உடலமைப்பும் அசைவமும்

திருக்குர்ஆனில் இறைவன் கீழ்க்கண்டவாறு கூறுகிறான்:

● “மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில் அனுமதிக்கப்பட்டவற்றையும் - பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள்.“ (குர்ஆன் 2:168)

சைவத்தோடு அசைவம் உண்ணவும் அனுமதி வழங்கிய நமது படைப்பாளன் அதற்கேற்றவாறு உடலமைப்பையும் தந்துள்ளதை ஆராய்வோர் அறியலாம்:

## கூரிய (கோரைப்) பற்களும் தட்டையான பற்களும்

நீங்கள் தாவர உண்ணிகளான ஆடு - மாடு - போன்ற கால்நடைகளை ஆராய்ந்து பார்த்தால் அவைகள் தாவர உணவு உண்ணுவதற்கு ஏற்றவாறு தட்டையான பற்களை மாத்திரம் கொண்டுள்ளதை அறியலாம். அதுபோல மாமிச உண்ணிகளான சிங்கம் - புலி - சிறுத்தை போன்றவைகளை ஆராய்ந்து பார்த்தால் அவைகள் மாமிச உணவு உண்ணுவதற்கு ஏற்றவாறு கூறிய பற்களை மாத்திரம் கொண்டுள்ளதை அறியலாம். அது போல நீங்கள் மனிதனுடைய பற்களின் அமைப்பை ஆராய்ந்து பார்த்தால் - மனிதர்கள் மாமிச உணவை உண்ணுவதற்கு ஏற்றவாறு கூரிய பற்களையும் - தாவர வகை உணவுகளை - உண்ணுவதற்கு எற்றவாறு தட்டையான பற்களையும் கொண்டவராக காணலாம். மனிதர்கள் தாவரவகை உணவுகளை மாத்திரம்தான் உண்ண வேண்டும் என்று இறைவன் எண்ணியிருந்தால் - மனிதர்களை - இறைவன் மாமிச உணவை உண்ணுவதற்கு ஏற்றவாறு கூரிய பற்களை கொண்டவர்களாக ஏன் படைத்திருக்க வேண்டும்?. மாமிச உணவையும் - தாவர வகை உணவையும் உண்ண வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இறைவன் மனிதர்களுக்கு கூரிய பற்களையும் தட்டையான பற்களையும் படைத்திருக்கிறான்.

## செரிமான அமைப்பு

மனித செரிமான அமைப்பு மாமிச வகை உணவுகளையும் தாவர வகை உணவுகளை செரிமானம் செய்வதற்கு ஏற்றதாக உள்ளது.

தாவர உண்ணிகளின் செரிமான அமைப்பு - தாவர வகை உணவுகளை மாத்திரம் செரிமானம் செய்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. அதுபோல மாமிச உண்ணிகளின் செரிமான அமைப்பு மாமிச வகை உணவுகளை மாத்திரம் செரிமானம் செய்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. ஆனால் மனித செரிமான அமைப்பு மாத்திரம் மாமிச வகை உணவுகளையும் தாவர வகை உணவுகளையும் செரிமானம் செய்வதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. மனிதர்கள் தாவரவகை உணவுகளை மாத்திரம்தான் உண்ண வேண்டும் என்று இறைவன் எண்ணியிருந்தால் - மனிதர்களின் செரிமான அமைப்பை - இறைவன் மாமிச வகை உணவுகளையும் தாவர வகை உணவுகளையும் செரிமானம் செய்வதற்கு ஏற்றவாறு ஏன் படைத்திருக்க வேண்டும்?

உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமா?

# படைத்தவனுக்கே பரிந்துரையா?

தான் படைத்த படைப்புகளை இவ்வுலகில் எவ்வாறு சமநிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதை அறிந்தவன் இவற்றைப் படைத்தவன் ஒருவன்தான். இங்கு அனைத்து ஆட்சியதிகாரமும் அவனுடையதே. ஒவ்வொரு படைப்பினத்திற்கும் பின்னுள்ள நோக்கம் என்ன, ஒவ்வொரு உயிரினத்திற்கும் என்னென்ன உரிமைகள் உள்ளன, யார் அல்லது எது யாருக்கு உணவாக வேண்டும், ஒவ்வொன்றினதும் தேவைகள் என்ன என்பன போன்ற நுணுக்கங்களை முழுமையாக அறிந்தவனும் அதில் அதிகாரம் செலுத்தக்கூடியவனும் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. பலவீனமான உயிர்களை உட்கொண்டே பலமான உயிர்கள் உயிர்வாழ்கின்றன என்பது இறைவன் இந்த பூமியில் ஏற்படுத்திய இயற்க்கை நியதி.

ஒரு பெரும் தூசு மண்டலத்திற்குள் ஒரு கண்ணுக்குத்தெரியாத துகள் போன்றது இந்த பூமி. இதன்மீது ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு நுண்ணிய துகள் போன்றவன் மனிதன். இம்மாபெரும் பிரபஞ்சத்தை ஒப்பிடும்போது அமைப்பிலும் ஆயுளிலும் அறிவிலும் அற்பத்திலும் அற்பமான மனிதனுக்கோ அல்லது ஒரு மனித கூட்டத்திற்கோ இறைநியதிக்கு மாற்றாக ஒன்றைப் பரிந்துரைக்க எள்ளளவு தகுதியும் கிடையாது என்பதை நாம் உணரக் கடமைப்பட்டுள்ளோம். அதையும் மீறி தங்களின் மனோஇச்சைப் படி குழப்பம் உண்டாக்குவோர் இறைவனின் கோபத்திற்கு ஆளாகிறார்கள். மறுமையில் இறைவனின் தண்டனையும் அவர்களுக்குக் காத்திருக்கிறது.

ஆதிமனிதரின் காலம் தொட்டே மனித வர்க்கம் தாவிர உணவோடு மாமிச உணவையும் உட்கொண்டே வந்துள்ளது. எக்காலத்திலும் இறைவன் மாமிச உணவைத் தடை செய்ததாக நாம் காண முடிவதில்லை. ஒரு குறிப்பிட்ட சாரார் தங்கள் உணர்வுகள் அடிப்படையில் பரிந்துரைத்த புலால் உண்ணாமை என்பது இன்று அரசியல் ஆதிக்க சக்திகளின் துணையோடு சட்ட வடிவம் பெற்று பிறர் மீது திணிக்கப் ஆடுவதால் அதனால் ஏற்படும் விபரீதங்களை அடையாளம் காண்பது அவசியம் ஆகிறது.

இயற்கைக்கும் இறைவனின் கட்டளைக்கும் மாற்றமாக அசைவம் உண்பதைத் தடுத்தல் என்பது அறிவுக்குப் பொருந்தாத ஒன்று என்பதைக் கீழ்கண்ட உண்மைகளைப் பற்றி சிந்திக்கும்போது அறியமுடியும்:

● **அப்பாவி விவசாயிகள், வியாபாரிகள் வாழ்வாதாரம் இழத்தல்** *(13 ஆம் பக்கக் கட்டுரையில் காண்க)*

● **அநியாயமாக கால்நடைகளின் பட்டினிச்சாவு** *(13 ஆம் பக்கக் கட்டுரையில் காண்க)*

● **அவிழ்த்துவிடப்பட்ட கால்நடைகள்:** வயதான கால்நடைகளை அறுக்க முடியாத நிலையில் சொந்தக்காரர்களுக்கு அவற்றைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்படும். எனவே அவை அவிழ்த்து விடப்படும். உணவைத் தேடி அவை நகரங்களுக்குப் படையெடுக்கும். வாகனப் போக்குவரத்துக்கும் மக்கள் நடமாட்டத்துக்கும் இடையூறு உண்டாகும்.

● **கால்நடைகள் பெருகும்**

உலகில் உள்ள ஒவ்வொருவரும் - சைவ உணவு மாத்திரம் உட்கொள்பவராக இருந்தால் - கால்நடைகளின் பெருக்கம் உலகத்தில் அதிகரிக்கும். ஏனெனில் கால்நடைகள் வேகமாக பெருகக் கூடியவை. அவ்வாறு பெருகினால்

மரங்களும் செடிகளும் புல்பூண்டுகளும் வேகமாக அழியும்..... தொடர்ந்து மழை பொழிவது நின்றுவிடும்.... கட்டுக்கடங்காத வறட்சி பெருகும்..... தொடர்ந்து பூமி வாழ்வு தடைபடும்.

● **மரக்கறி உணவின் கட்டுக்கடங்காத விலையேற்றம்:** கால்நடைகளின் பெருக்கம், தாவரங்களின் அழிப்பு, பஞ்சம், பட்டினி என தொடர் விளைவுகள்.

● **வளங்கள் வீணடிக்கப்படுதல்**: நாட்டின் இயற்க்கை வளங்களும் கடல் வளங்களும் வீணடிக்கப்படுதல், அவற்றைச் சார்ந்த தொழில்கள், ஏற்றுமதி இவை நிறுத்தப்பட்டு வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, பஞ்சம், பட்டினிச் சாவுகள் என தொடர் விளைவுகள்

● **உணவுச்சங்கிலி** உடைபடுவதால் ஏற்படும் இயற்க்கைச் சீற்றங்களும் விபரீதங்களும்

● **உழைப்போரின் உரிமை மறுத்தல்**

மாமிசம் புரதச்சத்தும் - புரோட்டீனும் அடங்கிய ஓர் முழு உணவாகும்.

உடலுக்குத் தேவையான முழு புரொட்டீனையும் பெறுவதற்கு மாமிசம் ஓர் சிறந்த உணவாகும். மாமிசம் உடலில் உற்பத்தி செய்யப்படாத ஆனால் உடலுக்குத் தேவையான எட்டுவிதமான அமிலோ அமிலங்களும் அடங்கிய உணவாகும். மாமிசத்தில் இரும்புச் சத்து மற்றும் வைட்டமின் பி1 மற்றும் நியாசின் போன்ற சத்துக்களும் அடங்கியுள்ளன. உடல் உழைப்பு இல்லாதோருக்கு சைவமே போதுமானதாக இருக்கலாம். ஆனால் கடின உடல் உழைப்பு செய்யும் தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் அசைவம் கட்டாயம் தேவைப் படுகிறது. மேலும் துருவப் பிரதேசங்களிலும் கடலோரங்களிலும் வாழ்வோரிடம் சைவத்தைத் திணிக்க முடியாது.

● **இன்னும் பற்பல விபரீதங்கள்:** மேற்கண்டவை நமது அறிவுக்கு எட்டிய ஒரு சில விளைவுகள் மட்டுமே. ஆனால் நம் சிற்றறிவுக்கு எட்டாத பல விளைவுகளும் இருக்ககூடும் என்பதே உண்மை. மேலும் இறைவனுக்குச் சொந்தமான பூமியில் இவர்கள் அசைவத்தை பலவந்தமாகத் தடுப்பது மூலம் ஏற்படுத்திய குழப்பங்களுக்கான மறுமை தண்டனை இவற்றை எல்லாம் விட அதிபயங்கரமானவை. இவற்றை எச்சரிப்பதும் நம் கடமை.

**78:21-30. நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது, வரம்பு மீறிவர்களுக்குத் தங்குமிடமாக. அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள். கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர. (அதுதான் அவர்களுக்குத்) தக்க கூலியாகும்.**

## வாசகர் எண்ணம்

● நான் ஆகஸ்ட் இதழ் பார்த்தேன்.செய்திகள் அனைத்தும் நன்றாக இருந்தது. ”தாயின் அழைப்பு வணக்கத்திலும் பெரிது” மற்றும் ”பெண்குழந்தைகளை வெறுப்பது பாவம்” ஆகிய பகுதிகள் இருள் சூழ்ந்த மனங்கள் தொடர்ந்து இறைநினைவு உள்ளமை ஆகும் பட்சத்தில் உவகை கொள்வதாக இருக்கிறது. நன்றி.

**சி. பழனியப்பன், மடப்புரம், திருவாரூர். 1**

● செப்டம்பர் மாத இதழ் அருமை. மேலும் மேலும் சிறப்படைய துஆ செய்கிறேன் இன்ஷா அல்லாஹ்.

**அப்துல் சுப்ஹான், ஊட்டி**

# படைத்தவன் பரிந்துரைக்கும் அறுப்பு முறை

இறைவன் தனது தூதர் மூலம் கற்றுத்தரும் முறையில் உயிரினங்களை அறுக்கும்போது அவற்றுக்கு எந்த வேதனையும் தெரியாது என்று நவீன சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.


உயிரினங்களை உணவாகக் கொள்ளும் முஸ்லிமல்லாதவர்கள் அவற்றைத் தண்ணீரில் மூழ்கடித்தோ, அல்லது கழுத்தை நெரித்தோ, தடியால் அடித்தோ, ஈட்டியால் குத்தியோ இன்னும் இது போன்ற வழிகளிலோ பிராணிகளின் உயிரைப் போக்குகின்றனர்.

ஆனால் இந்த வழிமுறைகளில் பிராணிகளைக் கொல்வதை இஸ்லாம் கண்டிக்கிறது. பிராணிகளின் குரல்வளையில் கூர்மையான கத்தி மூலம் அறுத்துத்தான் பிராணிகளைக் கொல்ல வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது.

குரல்வளை மிக விரைவாக அறுக்கப்படுவதால் மூளையுடன் உள்ள தொடர்பு அறுந்து போகின்றது. இதனால் அப்பிராணிகளால் வலியை உணர முடியாது. இரத்தத்தை வெளியேற்றுவதற்காக உடல் துடிக்கிறது வேதனையால் அல்ல என்பதை சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஜெர்மனி நாட்டில் உள்ள ஹனோவர் பல்கலைக் கழகத்தில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஆய்வை நடத்தியவர்கள் பேராசிரியர் சூல்ட்ஜ் மற்றும் அவரது துணை ஆய்வாளர் டாக்டர் ஹாஸிம் ஆவார்கள்.




அவர்கள் செய்த பரிசோதனையின் விவரத்தையும் அதன் முடிவுகளின் விவரத்தையும் கீழே தருகின்றோம்.

1) முதலில் உணவுக்காக அறுக்கப்படும் விலங்குகள் தேர்வு செய்யப்பட்டன.

2) அறுவை சிகிச்சை செய்து அவ்விலங்குகளின் தலையில் மூளையைத் தொடும்படி பல பகுதிகளில் மின்னணுக் கருவிகள் பொருத்தப்பட்டன.

3) உணர்வு திரும்பியதும், முழுவதுமாகக் குணமடைய பல வாரங்களுக்கு அப்படியே விடப்பட்டன.

4) அதன் பிறகு பாதி எண்ணிக்கை விலங்குகள் இஸ்லாமிய ஹலால் முறைப்படி அறுக்கப்பட்டன.

5) மறு பாதி எண்ணிக்கை விலங்குகள் மேற்கத்தியர் கையாளும் முறைப்படி கொல்லப்பட்டன.

6) பரிசோதனையின்போது கொல்லப்பட்ட எல்லா விலங்குகளுக்கும் E.E.G மற்றும் E.C.G பதிவு செய்யப்பட்டன. அதாவது E.E.G மூளையின் நிலையையும், E.C.G இருதய நிலையையும் படம் பிடித்துக் காட்டின.

**பரிசோதனை முடிவுகள்:**

இப்போது மேற்கண்ட பரிசோதனையின் முடிவுகளையும், அதன் விளக்கங்களையும் காண்போம்.

*1)* இஸ்லாமிய ஹலால் முறையில் விலங்குகள் அறுக்கப்பட்டபோது, முதல் மூன்று வினாடிகளுக்கு E.E.Gயில் எந்த மாற்றமும் தென்படவில்லை. அறுக்கப்படுவதற்கு முன்னிருந்த நிலையிலேயே அது தொடர்ந்து நீடித்தது. விலங்குகள் அறுக்கப்படும்போது அவை வலியினால் துன்பப்படவில்லை என்பதை இது காட்டியது.

*2)* மூன்று வினாடிகளுக்குப் பின் அடுத்த மூன்று வினாடிகளுக்கு விலங்குகள் ஆழ்ந்த தூக்கம் அல்லது உணர்வற்ற நிலைக்கு ஆளாகின்றன என்பதை E.E.G. பதிவு காட்டியது. அந்நிலை உடம்பிலிருந்து அதிகப்படியான ரத்தம் பீறிட்டு வெளியாவதால் ஏற்படுகின்றது.

*3)* மேற்கண்ட ஆறு வினாடிகளுக்குப் பின் E.E.G பூஜ்ய நிலையைப் பதிவு செய்தது. அறுக்கப்பட்ட விலங்கு எந்த வலி அல்லது வதைக்கும் ஆளாகவில்லை என்பதை இது காட்டியது.

*4)* மூளையின் நிலையை பூஜ்யமாகப் பதிவு செய்த நேரத்திலும், இதயத்துடிப்பு நிற்காமல் தொடர்ந்து துடிப்பதாலும் உடலில் ஏற்படும் வலிப்பினாலும் உடலிருந்து முற்றிலுமாக ரத்தம் வெளியேற்றப்படுகிறது. அதனால் அந்த மாமிசம் உணவுக்கேற்ற சுகாதார நிலையை அடைகிறது.

மேற்கத்தியர் கையாளும் முறைப்படி கொல்லப்பட்ட பிராணிகள் வேதனைக்கு உள்ளாகின்றன என்பதும் இந்தச் சோதனையில் தெரிய வந்தன.

*1)* இந்த முறையில் கொல்லப்படும் விலங்குகள் உடனே நிலைகுலைந்து உணர்வற்ற நிலைக்குப் போகின்றன.

*2)* அப்போது விலங்குகள் மிகக் கடுமையான வலியால் அவதியுறுவதை நு.நு.பு பதிவு காட்டியது.

*3)* அதே நேரத்தில் விலங்குகளின் இதயம், ஹலால் முறையில் அறுக்கப்பட்ட விலங்குகளோடு ஒப்பிடும்போது முன்னதாகவே நின்று விடுகிறது. அதனால் உடலில் மிகுதியான ரத்தம் தேங்கிவிடுகிறது. ரத்தம் உறைந்த அந்த மாமிசம் உட்கொள்ளத்தக்க சுகாதார நிலையை அடையவில்லை.

மேற்கண்ட ஆய்வுகள் இஸ்லாமிய ஹலால் முறையே சிறந்தது என்பதை எடுத்துக் காட்டுவதோடு அம்முறையே மனிதாபிமான முறை என்பதையும் நிரூபித்துள்ளது.

# வாசகர் எண்ணம்

● ஜூலை மாத இதழில் தோல்விகளிலும் வருத்தங்களிலும் துவண்டுவிடும் மனிதனை வழிநடத்திட உதவும் அருமையான உபதேசங்களைக் கொண்டு அமைந்திருந்தது ‘வாழ்க்கைப் பரீட்சையில் துன்பங்கள் சகஜமே’ கட்டுரை. தெளிவான பல விளக்கங்கள் நான் உட்பட பலருக்கும் இனி வழிகாட்டும். சிறுவனின் கேள்வியும் சிந்திக்க வைத்த முகமதலியும் – அருமையான சிந்தனைப் படைப்பு. சிந்திக்க வாய்த்த தெளிவுரை இதுவரை நான் படித்தறியாத படைப்பு. மற்ற அனைத்துப் படைப்புகளும் அருமை.

ஆகஸ்ட் இதழில் “மேன்மைக்கு வழிகோலும் மென்மை“ மனித நன்மைக்கு வழிகாட்டும் சிறந்த படைப்பு. பொறுப்புணர்வோடு குழந்தைகளை வளர்ப்பது பற்றிய ஆசிரியர் உரை அற்புதமான ஆலோசனை. அறிந்தவர்கள் நல்ல நல்ல தலைமுறையை உருவாக்கலாம். ‘பெண்குழந்தைகளை வெறுப்பது பாவம்“ பலரையும் திருத்தக்கூடிய அழுத்தமான வார்த்தைகள் கொண்டது.

**என் ஜே கந்தமாறன் , சென்னை 89**

# அசைவம் தவறு என்போருக்கான சில கேள்விகள்

உயிரினங்களை உணவுக்காகக் கொல்லக் கூடாது என்போர் அது உயிர்வதை என்றே காரணம் கூறுகின்றனர். உயிர்வதைதான் காரணம் என்றால் பல வி'யங்களை அவர்கள் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

1. உயிர்வதை என்று சொல்வோர் கால்நடைகளை விவசாயப் பணிகளிலும், பாரம் இழுக்கும் பணிகளிலும் பயன்படுத்துகின்றனர். இது உயிர்வதையா? இல்லையா?

2. உயிர்வதை என்று சொல்வோர் கன்றுகளுக்காக தாய்ப்பசுவிடம் சுரக்கும் பாலை ஏமாற்றி அருந்துகின்றனர். இது உயிர்வதையா? இல்லையா?

3. இன்றைய அறிவியல் உலகில் தாவரங்களுக்கும் உயிர் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது! தாவரங்களையும், காய் கனிகளையும் உண்பது உயிர்வதை இல்லையா?

4. மனிதன் அருந்துகின்ற தண்ணீரிலும் கோடிக்கணக்கான உயிர்கள் இருப்பது இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த உயிர்களுடன் தண்ணீரை அருந்துவது உயிர்வதை இல்லையா?

5. கொசு, தேள், பாம்பு போன்ற எத்தனையோ உயிர்களை மனிதன் தனது சுயநலத்திற்காகக் கொல்வது உயிர்வதை தானே?

6. உயிரினங்களை உட்கொள்ளக் கூடாது என்பதற்கு உயிர்வதை தான் காரணம் என்றால் மேற்கண்டவற்றிலும் உயிர்வதை இருக்கிறது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

7. அசைவம் சாப்பிடக் கூடாது என்பதற்கு உயிர்வதை தான் காரணம் என்றால் தாமாகச் செத்த பிராணிகளையும், மீன்களையும் தவிர்ப்பது ஏன்?

8. மீன்களைத் தவிர எந்த உணவும் கிடைக்காத துருவப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் இக்கொள்கையைக் கடைப்பிடித்தால் உலகில் வாழ முடியுமா?

9. இவ்வாறு மாமிசத்தைத் தவிர்ப்பவர்கள் கண்பார்வை கூர்மையடைவதற்காக மீன் எண்ணெய்யை உட்கொள்கின்றனர். இவர்களின் மனசாட்சி இதை ஏற்றுக் கொள்கிறது.

எனவே உயிர்வதை என்று சொல்வது போலியான காரணம் என்பது இதிலிருந்து தெரியவருகின்றது

# தாவரங்களுக்கும் உயிர் உண்டு

ஆனால் இன்றைய அறிவியல் யுகத்தில் - தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்பது அகிலம் முழுவதும் அறிந்த விஷயம். தாவரங்களால் வலியை உணர முடியாது. எனவே தாவரங்களை கொல்வது - உயிருள்ள பிராணிகளை கொல்வதைவிட - குறைந்த பாவம்தான் என சிலர் வாதிடக் கூடும். இன்றைய அறிவியல் - தாவரங்களும் வலியை உணர முடியும் என்றும் நமக்குக் கற்றுத் தருகிறது. 20 Hertz க்கு குறைவான சப்தத்தையும் 20000 Hertz க்கு மேற்பட்ட சப்தத்தையும் மனிதனால் கேட்க முடியாத காரணத்தால் தாவரங்கள் வலியினால் அலறுவதை நாம் அறிய முடியாது. அமெரிக்காவில் உள்ள விவசாயி ஒருவர் ஆராய்ச்சி செய்து தாவரங்கள் அலறுவதை - மனிதர்கள் கேட்கும் அளவுக்கு மாற்றக்கூடிய கருவி ஒன்றினை கண்டு பிடித்திருக்கிறார். மேற்படி கருவியின் மூலம் தாவரங்கள் தண்ணீருக்காக அலறுவதை மனிதர்களால் கேட்க முடியும். பின்னால் வந்த வேறு சில ஆராய்ச்சியாளர்கள் தாவரங்களும் - மகிழ்ச்சி - வருத்தம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றலை கொண்டவை என்றும் கண்டு பிடித்துள்ளனர்.

# அழியாத தியாக வரலாற்றுச் சுவடுகள்

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் மக்காவில் வேரூன்றிய இஸ்லாம் என்ற இறைமார்க்கம் இன்று உலகின் கால்வாசிக்கும் அதிகமானோரை ஈர்த்து நிற்கிறது. தன் வெற்றிப்பயணத்தை பற்பல எதிர்ப்புகளுக்கு இடையேயும் அயராது தொடர்கிறது. தனது தெளிவான கடவுள் கொள்கை மூலமாகவும் அது வலியுறுத்தும் தனிநபர் நல்லொழுக்கம், மனித சமத்துவம், சகோதரத்துவம், பெண்ணுரிமைகள், குடும்பக் கட்டமைப்பு, மனித உரிமைகள், சமூகத் தீமைகளுக்கு தீர்வுகள் போன்றவற்றின் மூலமாகவும் உலகெங்கும் பெருவாரியான மக்களை கவர்ந்து வருகிறது. இஸ்லாம் என்ற பேரியக்கத்தில் உலகம் தொடர்ந்து இணைந்து வருகிறது. இந்த எழுச்சியை பரவவிடாமல் தடுக்க பல தந்திரங்கள் அவ்வப்போது கையாளப் பட்டபோதிலும் அது சளைக்காமல் முன்னேறுகிறது.

ஆனால் இம்மார்க்கம் இப்பூமியில் வேரூன்றுவதற்காக தொடக்க காலத்தில் உத்தம நபிகளாரும் அருமை நபித்தோழர்களும் மேற்கொண்ட தியாகங்கள் ஒப்பீடு செய்ய இயலாதவை. அவர்கள் அன்று மக்கா நகரின் மண்ணில் சிந்திய இரத்தமும் வியர்வையும் சதைத்துண்டுகளும் இஸ்லாம் என்ற மார்க்கம் உலகளாவிய நிலையில் வளர்வதற்கு உரமாக அமைந்தன. அவர்களின் தியாக வரலாறுகள் இம்மார்க்கத்தில் தொடர்ந்து இணைந்து வருவோருக்கு முன்னுதாரணமாக நிற்கின்றன.

**மக்காவில் தொடங்கிய தியாக வரலாறு**

இறைவனின் தூதராக நபிகளார் தேர்வு செய்யப்பட்ட பின் இறைவனின் ஆணையின் பேரில் நபி (ஸல்) அவர்கள் மக்கா நகர மக்களுக்கு பகிரங்கமாக இஸ்லாத்தின்பால் அழைப்பை விடுத்தார்கள். நபிகளாரின் பிரச்சாரத்தைக் கேட்டு மக்கள் இந்த இயக்கத்தில் இணைவதைத் தடுக்க அன்றைய ஆதிக்க சக்திகள் பற்பல உத்திகளைக் கையாண்ட போதிலும் அவை தோல்வியைத் தழுவின. தாங்கள் கையாண்ட வழிமுறைகளால் எவ்வித பயனுமில்லை என்று அவர்கள் உணர்ந்தபோது அடுத்த கட்ட நடவடிக்கையாக மாற்று வழியைக் கையாண்டனர். அதாவது, ஒவ்வொரு சமூகத்தலைவரும் எஜமானரும் தன்னுடைய ஆளுமையின் கீழுள்ளவர்கள், அடிமைகள்- இவர்களில் யாராவது இஸ்லாமைத் தழுவினால் அவர்களைத் துன்புறுத்த வேண்டும். அவர்களுக்கு இன்னல்கள் விளைவிக்க வேண்டும் என முடிவு செய்தனர்.

தலைவர்களுடன் அவர்களது எடுபிடிகளும் சேர்ந்துகொண்டு முஸ்லிம்களை வாட்டி வதைத்தனர். குறிப்பாக, சாதாரண எளிய முஸ்லிம்களுக்கு அவர்கள் தந்த நோவினைகளைக் கேட்கும்போதே உள்ளம் கசிந்துருகும். அவற்றை சொல்லி மாளாது.

**சித்திரவதைகள்**

- அப்பாவி முஸ்லிம்களை பேரீத்தங்கீற்றுப் பாயில் சுருட்டி வைத்து அதற்குக் கீழே புகை மூட்டி மூச்சு திணறடிப்பர்.
- தனது மகன் முஸ்லிமாகி விட்டதை அறிந்த முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்களின் தாயார் அவருக்கு உணவு, தண்ணீர் கொடுக்காமல் வீட்டிலிருந்து விரட்டிவிட்டார்.
- பிலால் (ரழி) அவர்கள் உமய்யா இப்னு கல..புடைய அடிமையாக இருந்தார்கள். உமையா அவர்களது கழுத்தில் கயிற்றைக் கட்டி சிறுவர்களிடம் கொடுப்பான். சிறுவர்கள் அவரை மக்காவின் கரடு முரடான மலைப் பாதைகளில் இழுத்துச் செல்வார்கள். கயிற்றின் அடையாளம் அவர்களது

கழுத்தில் பதிந்துவிடும். அவர்கள் "அஹத்! அஹத்!"" என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். சில வேளைகளில் உமையா பிலாலை மிக இறுக்கமாகக் கட்டி தடியால் கடுமையாகத் தாக்குவான். பிறகு சூரிய வெப்பத்திலும் போடுவான். உணவளிக்காமல் பசியால் துடிக்க வைப்பான். சுட்டெரிக்கும் சூரிய வெப்பத்தில் பாலைவன மணலில் கிடத்தி அவர்களது நெஞ்சின்மீது பாறாங்கல்லைத் தூக்கி வைப்பான்.

● அம்மார் இப்னு யாஸிர் (ரழி), அவர்களது தகப்பனார் யாஸிர், தாயார் ஸுமய்யா ஆகிய மூவரும் மக்ஜூம் கிளையைச் சேர்ந்த அபூ ஹுதை∴பா இப்னு முகீரா என்பவனின் அடிமைகளாக இருந்தார்கள். மூவரும் இஸ்லாமைத் தழுவினர். இம்மூவரையும் அபூஜஹ்ல் தலைமையில் ஒரு கூட்டம் "அப்தஹ்' என்ற இடத்துக்கு அழைத்துச் சென்று மதிய வேளையில் சுடு மணலில் கிடத்தி கடுமையாக சித்திரவதை செய்தனர்.

● நிராகரிப்பவர்களின் வேதனையாலேயே யாஸிர் (ரழி) இறந்துவிட்டார்கள். வயது முதிர்ந்து இயலாதவராக இருந்த அம்மாரின் தாயாரான சுமைய்யா பின்த் கய்யாத் (ரழி) அவர்களை அபூ ஜஹ்ல் அவர்களது பெண்ணுறுப்பில் ஈட்டியால் குத்திக் கொலை செய்தான். இவரே இஸ்லாமிற்காக உயிர் நீத்த முதல் பெண்மணியாவார்.

● அவர்களது மகனாரான அம்மாரை பாலைவனச் சுடுமணலில் கிடத்தி நெஞ்சின் மீது பாறாங்கல்லை வைத்தும், நினைவிழக்கும் வரை தண்ணீல் மூழ்கடித்தும் சித்திரவதை செய்தனர்.

● அ∴ப்லஹ் அபூ ∴புகைஹா (ரழி) அவர்கள் அப்து தார் கிளையைச் சார்ந்த ஒருவருடைய அடிமையாக இருந்தார். இவரது இரு கால்களையும் சங்கிலியால் பிணைத்து, ஆடைகளைக் கழற்றிவிட்டு சுடுமணலில் குப்புறக் கிடத்தி அசையாமலிருக்க பெரும் பாறையை முதுகின் மீது வைத்து, சுய நினைவை இழக்கும்வரை அவரை அதே நிலையில் விட்டுவிடுவார்கள்.

● கப்பாப் இப்னு அரத் (ரழி) அவர்கள் உம்மு அன்மார் என்ற பெண்ணின் அடிமையாகவும், கொல்லராகவும் இருந்தார்கள். அவர் இஸ்லாமைத் தழுவியதை அறிந்த எஜமானி பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பால் அவர்களது தலையிலும் முதுகிலும் சூடிட்டு "முஹம்மதின் மார்க்கத்தை விட்டுவிடு" என்று கூறுவாள். ஆனால் இவ்வாறான வேதனைகளால் அவர்களது இறைநம்பிக்கையும் மன உறுதியுமே அதிகரித்தது. உம்மு அன்மார் மட்டுமின்றி ஏனைய சத்தியமறுப்பாளர்களும் அவரது முடியைப் பிடித்திழுப்பார்கள் கழுத்தை நெறிப்பார்கள். நெருப்புக் கங்குகளின் மீது அவரைப் படுக்க வைப்பார்கள். அந்த நெருப்பு அவரது உடலைப் பொசுக்க, அப்போது இடுப்பிலிருந்து கொழுப்பு உருகி ஓடி, நெருப்பை அணைத்து விடும்.

● உம்மு உபைஸ் (ரழி) என்ற பெண்மணி அஸ்வத் இப்னு அப்து யகூஸ் என்பவனின் அடிமையாக இருந்தார். இவன் நபி (ஸல்) அவர்களின் கொடும் விரோதியாகவும் நபியவர்களை பரிகசிப்பவனாகவும் இருந்தான். அவன் உம்மு உபைஸை கொயூரமாக வேதனை செய்தான். (இஸாபா)

இஸ்லாமைத் தழுவிய எவரையும் அவர்கள் துன்புறுத்தாமல் விட்டதில்லை. எளிய முஸ்லிம்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்காகப் பழிவாங்கவும் எவருமில்லை என்பதால் அவர்களைக் கடுமையாகத் தண்டிப்பது சத்தியமறுப்பாளர்களுக்கு மிக எளிதாக இருந்தது. அடிமைகளாக இருந்தவர்களை அவர்களது எஜமானர்களும் அவர்களைச் சுற்றியிருந்தவர்களும் கொடுமைப் படுத்தினர்.

ஆசிரியர் உரை

# கர்நாடகாவும் தமிழ்நாடும் இணைய முடியுமா?

இன்று தமிழகத்தை கலவர பூமியாக்கும் இரண்டு பிரச்சினைகள் நிலவில் உள்ளன. ஒன்று காவிரி நீர் பிரச்சினை மற்றது ஜாதிகளுக்கு இடையேயான பிரச்சினை. உண்மையில் நடப்பது என்ன?

ஒரே மனித குலத்தின் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் பயங்கரமான முறையில் தாக்கிக்கொண்டிருப்பதையும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துக்கொண்டிருப்பதையும் கண்டு வருகிறோம். சில அடிப்படை உண்மைகளை சிந்திக்கவோ உணரவோ செய்யாததன் காரணமாக வேறு மொழி வேறு மாநிலம் வேறு ஜாதி என்றும் கூறி தன் சகோதரனைப் பகைத்து வாழும் நிலை தொடர்கிறது என்பதுதான் உண்மை. சாதாரண அறிவு கொண்டு சிந்தித்தாலே மனிதர்கள் அனைவரும் ஒரே மூலத்தில் இருந்து வந்த - அதாவது ஆதித்தாய் மற்றும் ஆதித்தந்தையின் - வழித்தோன்றல்களே என்பதை விளங்க முடியும். ஆனால் இந்த உண்மையை மனிதர்கள் மறந்து போகும்படி நம்மைப் பகடைக்காய்களாக பயன்படுத்தி ஆதாயம் தேடும் சுயநல சக்திகள் சதி செய்கின்றன. ஆனால் நம்மையறியாமல் அனைவரும் இத்தீய சக்திகளுக்குத் துணைபோகும் நிலையில் உள்ளோம்.

உண்மையில் இன்று நாம் வாழும் பிரபஞ்சத்தையும் நம்மையெல்லாம் படைத்தவனும் நமது வசதிக்காக இங்கு நீரையும் காற்றையும் உணவையும் உண்டாக்கியவனும் இந்த பிரபஞ்சத்தின் சொந்தக்காரனும் ஆன இறைவன் நமக்கு மேற்படி உண்மையை இவ்வாறு நினைவூட்டுகிறான்:

- **மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் உரிமைகளைக் கோருவீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

அதாவது ஒன்றே மனித குலம், நம் அனைவருக்கும் இருப்பது ஒரேயொரு இறைவனே, அவன்தான் நம்மையெல்லாம் படைத்து பரிபாலித்து வருகிறான். அவனையன்றி வேறு தெய்வங்கள் கிடையாது. நாம் அனைவரும் சதா அவனது கண்காணிப்பின் கீழ் உள்ளோம், இன்று நாம் வாழும் தற்காலிக வாழ்க்கை ஒரு பரீட்சை போன்றது, நம் வினைகளுக்கு மறுமையில் விசாரணையும் அதற்கேற்ப சொர்க்கமும் நரகமும் வாய்க்க உள்ளது என்ற அடிப்படை உண்மைகளை இந்த இறைவசனம் தாங்கி நிற்கிறது.

இந்த உண்மைகளை மனிதன் மறந்து போவதால்தான் சக மனிதனை சகோதரனாகவோ சமமானவனாகவோ ஏற்க மறுக்கிறான். அவனுக்கும் தன்னைப் போலவே உரிமைகள் உண்டு என்பதையும் அவற்றை அநியாயமாகப் பறித்தாலோ மீறினாலோ இவற்றைக் கண்காணித்து வரும் இறைவனிடம் தண்டனை காத்திருக்கிறது என்பதையும் உணர்வதில்லை. இவற்றை மனிதனுக்கு நினைவூட்டி இவ்வுண்மைகளை மனித மனங்களில் ஆழமாக விதைத்து அவர்களை சீர்திருத்தி ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்க வேண்டியே இறைவன் தனது தூதர்களையும் அவர்கள் மூலம் வேதங்களையும் பூமியின் பல்வேறு பாகங்களுக்கும் பல்வேறு

காலகட்டங்களில் அனுப்பி வந்துள்ளான். அந்த வரிசையில் இறுதியாக வந்தவரே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்கள் மூலமாக அனுப்பப்பட்ட வேதமே திருக்குர்ஆன் ஆகும்.

ஒரே மானிடக் குடும்பத்தைச் சேர்ந்த நாம் பல்வேறு காரணங்களுக்காக இனத்தாலும் இடத்தாலும் மொழியாலும் நிறத்தாலும் இன்ன காரணிகளாலும் வேறுபட்டிருக்கிறோம் என்பது உண்மையே. ஆனாலும் இவற்றைக் காரணம் காட்டி ஒருவர் மற்றவர் மீது மேன்மை பாராட்டவோ அல்லது அதிகாரம் அல்லது அடக்குமுறை பிரயோகம் செய்யவோ இறைவன் அனுமதிப்பதில்லை. இது இறைவன்பால் அநீதியே. இறையச்சத்தின் உயர்வு - அதாவது நன்னடத்தை - மட்டுமே இறைவனின் மதிப்பைப் பெற்றுத்தரகூடியது :

- **மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். (திருக்குர்ஆன் 49:13)**

இனம், நிறம், நாடு, மொழி, செல்வம் போன்றவை இந்தத் தற்காலிக வாழ்க்கை எனும் பரீட்சையில் நம்மைப் பரீட்சிப்பதற்காக தரப்பட்டவையே. இந்தப் பரீட்சையை முடித்துக்கொண்டு இறைவன் பால் திரும்பும்போது நாம் இவற்றை எவ்வாறு பயன்படுத்தினோம் என்பது பற்றிய விசாரணை இறைவனிடம் உள்ளது.

## பிரிவினை எதனால்?

ஒரே மனிதகுலத்தைச் சார்ந்த நம்மை இன்று பிரித்து வைத்திருப்பவை ஒரு சில கற்பனைப் பாத்திரங்களும் மூட நம்பிக்கைக்களும்தான். சிந்தித்துப் பாருங்கள், மொழி என்பது ஒரு தகவல்தொடர்புக்கான சாதனம். அதனை நாம் அவ்வாறே புரிந்து கொள்ள வேண்டும். மொழியைக் கடவுளாக சித்தரிப்பதும் மொழியின் பெயரால் தமிழ்த்தாய் அல்லது கன்னடமாதே என்று கற்பனை உருவங்களும் சிலைகளும் செய்து அவற்றை வழிபடுவதும் வழிபடாதவர்களை மிரட்டுவதும் துன்புறுத்துவதும் எல்லாம் ஷைத்தான் என்ற மனிதகுல எதிரியின் சதியாகும்.

இதைப் போலவே நம் நாட்டை வெகுவாக பாதித்து வரும் பெரிய தீமை ஜாதிப்பிரிவினை. உண்மையில் இவ்வுலகத்தைப் படைத்துப் பரிபாலிப்பவன் எவனோ அவன் மட்டுமே உண்மை இறைவன் என்பதை பகுத்தறிவு கொண்டு சிந்திப்போர் யாரும் ஐயமின்றி உணரலாம். ஆனால் நம் முன்னோர்களிடம் சில இடைத்தரகர்கள் பல்வேறு உருவங்களையும் படைப்பினங்களையும் எல்லாம் காட்டி அவற்றையே கடவுள் என்று கற்பித்தார்கள். நம் முன்னோர்கள் அவற்றை நம்பியதால் ஒவ்வொரு கடவுளர்களையும் வணங்கும் கூட்டாத்தார் ஒவ்வொரு ஜாதிகளாயினர். இந்த இடைத்தரகர்கள் அவற்றை உயர்ந்த ஜாதிகள் என்றும் தாழ்ந்த ஜாதிகள் என்றும் தாமாகத் தரம்பிரித்து அவற்றிற்கிடையே பாகுபாட்டை கற்பித்தனர். அதன் விளைவுகளைத் தான் இன்று அனுபவித்து வருகிறோம்.

எனவே நம்மைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் இருந்து விடுபட வேண்டுமானால் கற்பனை தெய்வங்களை விடுத்து நம்மைப் படைத்தவனை மட்டுமே வணக்கத்திற்கு உரியவனாக ஏற்று அவன் வழங்கும் வாழ்க்கை நெறியை பின்பற்றி வாழவேண்டும். அந்த நெறிதான் இன்று இஸ்லாம் என்று அரபு மொழியில் அறியப்படுகிறது.

# அடிமைகளை விடுவித்த அபூபக்கர் (ரலி)

● வரலாறு போற்றும் இஸ்லாமிய ஆட்சியாளரும் நபிகள் நாயகத்தின் உற்ற தொழருமாக விளங்கிய உமர் (ரலி) அவர்கள் ஆரம்பத்தில் இஸ்லாத்தின் கடுமையான எதிரியாக இருந்தார். அக்காலத்தில் அம்ர் இப்னு அதீ என்பவனின் அடிமைப் பெண் இஸ்லாத்தை ஏற்றார். அவரை உமர் (ரழி), தான் களைப்படையும் வரை சாட்டையால் அடித்துவிட்டு "நீ மரணிக்கும்வரை உன்னை நான் விடமாட்டேன்" என்று கூறுவார். அதற்கு அப்பெண்மணி "அப்படியே உமது இறைவனும் உம்மைத் தண்டிப்பான்" என்று கூறுவார். (இப்னு ஹிஷாம்)

● இஸ்லாமை ஏற்றதற்காக கொடுமை செய்யப்பட்ட அடிமைப்பெண்களில் நஹ்திய்யா (ரலி) என்பவரும் அவரது மகளும் அடங்குவர். இவ்விருவரும் அப்துத்தான் கிளையைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் அடிமையாக இருந்தனர். (இப்னு ஹிஷாம்)

● இஸ்லாமை ஏற்றதற்காகக் கொடுமை செய்யப்பட்ட ஆண் அடிமைகளில் ஆமிர் இப்னு புஹைரா (ரலி) என்பவரும் ஒருவர். நினைவிழந்து சித்தப் பிரமை பிடிக்குமளவு அவரை கொடுமைப்படுத்தினார்கள். (இப்னு ஹிஷாம்)

இம்மூவரையும் அபூபக்ர் (ரலி) விலைக்கு வாங்கி உரிமையிட்டார்கள். இதைக் கண்ட அவர்களது தந்தையான அபூ குஹா.்.பா "நீ பலவீனமான அடிமைகளை விலைக்கு வாங்கி உரிமை விடுகிறாய். திடகாத்திரமான ஆண் அடிமைகளை வாங்கி உரிமையளித்தால் அவர்கள் உனக்கு பக்கபலமாக இருப்பார்களே!" என்றார்.

அதைக் கேட்ட அபூபக்ர் (ரலி) அவர்கள் "நான் இறைவனின் திருப்தியை நாடியே செய்கிறேன்" என்றார்கள். இறைவன் அவர்களைப் புகழ்ந்தும் இஸ்லாமின் எதிரிகளை இகழ்ந்தும் கீழ்காணும் திருக்குர்ஆன் வசனங்களை இறக்கினான்.

**● (மக்காவாசிகளே!) கொழுந்து விட்டெயும் நெருப்பைப் பற்றி நான் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றேன். மிக்க துர்பாக்கியம் உடையவனைத் தவிர, (மற்றெவனும்) அதற்குள் செல்ல மாட்டான். அவன் (நம்முடைய வசனங்களைப்) பொய்யாக்கிப் புறக்கணித்துவிடுவான். (அல்குர்ஆன் 92:14-16)**

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள துர்பாக்கியமுடையவன் உமைய்யாவும் அவனுடைய வழியில் முஸ்லிம்களை கொடுமைப்படுத்தியவர்களுமாவர்.

**● இறையச்சமுள்ளவர்தான் அதிலிருந்து தப்பித்துக் கொள்வார். (அவர் பாவத்திலிருந்து தன்னைப்) பரிசுத்தமாக்கிக் கொள்ளும் பொருட்டுத் தன்னுடைய பொருளை(த் தானமாக)க் கொடுப்பார். அவர் பதில் செய்யக்கூடியவாறு எவருடைய நன்றியும் அவர் மீது இல்லாதிருந்தும், மிக்க மேலான தன் இறைவனின் முகத்தை விரும்பியே தானம் கொடுப்பார். (இறைவன் அவருக்கு அளிக்கும் கொடையைப் பற்றிப்) பின்னர் அவரும் திருப்தியடைவார். (அல்குர்ஆன் 92:17-21)**

இவ்வசனத்தில் இறையச்சமுள்ளவர் என குறிப்பிடப்படுபவர் அபூபக்ர் (ரலி) அவர்களாவார். (இப்னு ஹிஷாம்)

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.
- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block,
AS palya, Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9944656942, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018(நுங்கம்பாக்கம), 9840527687(பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 தர்மபுரி:9842627171
கோவை:9003555755 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246
ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888
உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344
மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002
திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942
மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994453346
தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210
அருப்புக்கோட்டை:9043899409 ராஜபாளையம்:7845033616
ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எஃப்:9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, #8, 4th cross, 2nd main, LB Sastri nagar, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173